பக்கங்கள்: 12+IV= பதினாறு

Registered as a Newsp...

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 4 ஞாயிற்றுக்கிழமை (18-05-2003) UTHAYAN - A Lively National Ta... ...y கதிர்:173

★ சிரான் உபகுழுவுக்கு விரைவில் சட்ட அங்கீகாரம்

★ அதனை நிறைவேற்ற பிரதமரின் உறுதிக் கடிதம்

# புலிகளின் அதிருப்தியைக் களைய அரசு புதிதாகத் திட்டம் சமர்ப்பிப்பு

## போராளிகளின் பதில் ஓரிரு நாள்களில் வரும்

யாழ்ப்பாணம்,மே18

✪ சிரான் உபகுழுவுக்கு நிதி, நிர்வாக அதிகாரங்களை பெற்றுக்கொடுக்கும் சட்ட அங்கீகாரம் விரைவில் வழங்கப்படும்.

✪ அதனை எழுத்தில் உறுதிப்படுத்தி புலிகளுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடிதம் ஒன்றைத் தருவார்.

சமாதானப் பேச்சு மேசைக்கும், ஜப்பான் உதவி வழங்கும் மாநாட்டுக்கும் விடுதலைப் புலிகளை அழைத்து வரும் வகையில் - அவர்களின் தற்போதைய அதிருப்தி நிலையைக் களையும் நோக்கோடு - மேற்படி இரு விடயங்கள் அடங்கிய புதிய திட்டம் ஒன்றை இலங்கை அரசு, நோர்வேத் தூதுக்குழு ஊடாக நேற்றுப் புலிகளுக்கு சமர்ப்பித்திருக்கின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும், ஆறு சுற்று சமாதானப் பேச்சுக்களிலும் இணக்கம் காணப்பட்ட பல விடயங்களை அரசு நடைமுறைப்படுத்தாததை ஆட்சேபித்து சமாதான பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்துகிறோம் எனவும் - ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் நாங்கள் பங்குபற்றமாட்டோம் எனவும் விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கிறார்கள் என்பது தெரிந்ததே.

சமாதான பேச்சு மேசைக்கும் உதவி வழங்கும் நாடுகளின் ஜப்பான கூட்டத்திற்கும் புலிகளை அழைத்து வரும் பகீரதப் பிரயத்தனத்தில் ஜப்பான் மற்றும் அரசு, புலிகள் பேச்சுக்கு அனுசரணை வழங்கும் நோர்வே போன்ற நாடுகள் ஈடுபட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த முயற்சியின் ஒரு கட்டமாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் தலைமையிலான

(12ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாகத்தில் முகாம் நிறுவ இராணுவத் தரப்பு முஸ்தீபு

வலி.வடக்கு,மே18

மல்லாகம் ரயில் நிலையத்துக்குச் சமீபமாக ஏழாலை சந்தைப் பகுதியிலும் மல்லாகம் நீதிமன்ற வளாகப் பகுதியிலும் புதிய இராணுவ முகாம்களை அமைக்க இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

1995 ஆம் ஆண்டு நிகழ்ந்த இடம்பெயர்வின் பின் ஏழாலை பழைய சந்தைப் பகுதியில் கண்ணிவெடிகள் இருந்ததால் சந்தை மீள இயக்கப்படவில்லை.

இப்போது சந்தைப் பகுதியில் உள்ள பற்றைகள், மரங்கள் என்பன படையினரால் வெட்டப்பட்டு, அப்பகுதியை துப்புரவு செய்யும் பணி நடக்கிறது.

ஏழாலை மகா வித்தியாலயத்துக்கு அருகில் அல்லது மல்லாகம் சந்திப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம்களை இந்தப் பகுதிகளுக்கு இடம்மாற்றவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொதுமக்கள் தரப்பில் ஊகம் தெரிவிக்கப்பட்டது.

மல்லாகம் நீதிமன்ற வளாகப் பகுதியிலும் முகாம் அமைக்கும் முயற்சியில் படையினர் நேற்றுப் பிற்பகலில் ஈடுபட்டனர்.

அந்த வளாகப் பகுதியில் விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் வெளியேற்றப்பட்டு அங்கு துப்புரவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. (ம-3-46-86)

### முகாம் அமைப்பதை கண்டித்து இன்று மல்லாகத்தில் மறியல்

மல்லாகம் ரயில் நிலையப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கும் முயற்சியைக் கண்டித்து இன்று காலை 9.00 மணியளவில் அடையாள மறியல் போராட்டம் ஒன்று மல்லாகத்தில் இடம்பெறவுள்ளது.

ஏழாலை, மல்லாகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் நேற்று மாலை (12ஆம் பக்கம் பார்க்க)

## இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளத்துக்கு 7 பேர் பலி

கொழும்பு,மே18

இரத்தினபுரி,காலி, மாத்தறை பகுதிகளில் நேற்றுமுன்தினம் காலைமுதல் பெய்யும் தொடர்மழை காரணமாக பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர்.

நேற்றுமுன்தினம் காலைமுதல் இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

நகரப் பகுதியில் 6 அடி உயரத்துக்கு வெள்ளம் பாய்வதாகவும், தொடர்ந்து மழை பெய்வதால் வெள்ள

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடாக்கடலில் குண்டுச் சத்தம்

யாழ்ப்பாணம்,மே18

யாழ்குடாக் கடற்பகுதியில் நேற்று முன்னிரவு முதல் நள்ளிரவு வரை குண்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன. இது குறித்து காங்கேசன்துறையில் உள்ள கடற்படை அதிகாரிகளிடம் கேட்ட போது கடற் பகுதியில் அசம்பாவிதங்கள் எவையும் நிகழவில்லை எனத் தெரிவித்தனர்.

அதேசமயம், கடற்படையினர் பயிற்சியில் ஈடுபட்டதாக உறுதிப்படுத்தப்படாத தகவல் ஒன்று தெரிவித்தது.

## ஜப்பான் மாநாட்டுக்கு புலிகளையும் இணங்க வைக்க நோர்வே பிரயத்தனம்

கிளிநொச்சி,மே18

ஜப்பானில் அடுத்தமாதம் 9,10 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில இலங்கை அரசுடன் விடுதலைப் புலிகளையும் பங்குபற்றச் செய்வதற்கு நோர்வே சமாதானக் குழு பகிரத பிரயத்தனம் மேற்கொண்டுள்ளது.

இந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்கு முன்னோடியாக வடக்கு - கிழக்குக்கான அதிகாரம் உள்ள கட்டமைப்பு ஒன்று உருவாக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்த யோசனை தொடர்பாக இரு தரப்புக்களுக்கும் இடையில் இணக்கநிலை ஒன்றைத் தோற்றுவிப்பதற்காக நோர்வே சமாதானக்குழு தீவிரமாகச் செயற்பட்டுவருகிறது.

வடக்கு - கிழக்கிற்கான அதிகாரக் கட்டமைப்புத் தொடர்பாக கடந்த திங்கட்கிழமை நடந்த சந்திப்பில் புலிகள் வலியுறுத்தியிருந்தனர். இது குறித்து நோர்வேக்குழு அன்றையதினம் இரவே அரசுடன் கலந்தாலோசனை நடத்தியது. மறுநாள் அரசிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் ஒன்றைப் பெற்றுக்கொண்டது.

அந்தப் பதிலுடன் நேற்றுக்காலை வன்னிவந்த தூதுக்குழு இன்றும் அங்கு தங்கியிருந்து புலிகளின் தீர்க்கமான பதிலைப்பெற முடிவுசெய்தது. குழு மீண்டும் வன்னி வரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நோர்வே சமாதானக் குழுவினர் அரச தரப்பினரை இன்று காலை சந்தித்துப் பேச்சு நடத்த இருக்கின்றனர்.

அரச சமாதானக் குழுவின் பிரதிநிதிகளான அமைச்சர்கள் பேராசிரி

(12ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்காக நேற்று கிளிநொச்சி வந்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் (இடது) கிளிநொச்சி மைதானத்தில் வந்திறங்கியதும் புலிகளின் சமாதான செயலக செயலாளர் புலித்தேவனால் (வலது) அரசியல் துறை நடுவப் பணியகத்துக்கு அழைத்துச் செல்லப்படுகிறார். (படம்:தேவா)

## தற்போதைய நெருக்கடி நிலையில் சில தினங்களில் முன்னேற்றம்?

### நோர்வே பிரதி அமைச்சர் புலிகளை சந்தித்த பின் நம்பிக்கை

கிளிநொச்சி,மே18

சமாதான முயற்சிகளில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்குத் தீர்வுகாண இரு தரப்பினரும் வழிமுறைகளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அடுத்த சில தினங்களில் முன்னேற்ற நிலை காணப்படலாம் என்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் கிளிநொச்சியில் நேற்று கலந்துரையாடல் நடத்தியபின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்குக்கான புனர்வாழ்வு மனிதாபிமானப் பணிகளை அரசும், விடுதலைப் புலிகளும், சர்வதேச சமூகமும் இணைந்து விரைவுபடுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து கலந்துரையாடினோம். முன்னேற்றகரமானதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் இக் கலந்துரையாடல் அமைந்திருந்தது.

வடக்கு - கிழக்கின் அபிவிருத்தி குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. சாத்தியமான வழியில் தற்போதைய பிணக

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்து கலாசார அமைச்சருக்கு சித்தன்கேணியில் கடும் எதிர்ப்பு

### மக்களுடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டார்

யாழ்ப்பாணம்,மே18

சித்தன்கேணியில் உள்ள ரெலிகொம் கட்டடப் பகுதியை நேற்றுப் பிற்பகல் பார்வையிடச்சென்ற இந்து கலாசார அமைச்சர் தியாகேஸ்வரனுக்கும் அப்பகுதி மக்களுக்கும் இடையே முறுகல்நிலை ஏற்பட்டுள்ளது. அமைச்சருக்கு எதிராக அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புக் காட்டியுள்ளனர். அமைச்சருக்கும் மக்களுக்கும் இடையில் வாக்குவாதம் முற்றி அது கைகலப்புவரை

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### தென்மராட்சி பிரதேசத்தில்

# அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் ஆறு பாடசாலைகள் மூடப்படும்

## எதிர்ப்பு நடவடிக்கைக்கு மாணவர் முஸ்தீபு!

தென்மராட்சி,மே18

தென்மராட்சி பிரதேசத்தில் அதி உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள ஆறு பாடசாலைகள் மூடப்படவுள் என என அறிவிக்கப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயம், ஒட்டுவெளி அ.த.க. பாடசாலை, கரகம்பகம் அ.த.க. பாடசாலை, தனங்கிளப்பு அ.த.க. பாடசாலை, மறவன்புலோ சகலகலா வல்லி வித்தியாலயம், எழுதுமட்டு வாழ் வடக்கு அதகபாடசாலை ஆகிய ஆறு பாடசாலைகளே இவ்வாறு மூடப்படவுள்ளன.

இதற்கிடையில் - மேற்படி பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசார ஊழியர்கள் தற்போது தற்காலிகமாக கடமையாற்றும் பாடசாலைகளில் இணைக்கப்படவுள்ளனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

இதேவேளை - மக்கள் மீளக்குடியமர முடியாமல் உள்ள பகுதிகளில் உள்ள பாடசாலைகளை மூடுவதை ஆட்சேபித்து இந்தப் பாடசாலைகளின் மாணவர்களும் பெற்றோரும் தென்மராட்சி கல்வி வலயம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட முஸ்தீபு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என மற்றொரு தகவல் தெரிவித்தது. (எ-117)



கடந்தவாரம் குடாநாட்டில் வீசிய கடும் காற்றினால் மாதகல் பகுதியில் பல மீன்பிடிப் படகுகள் கடும் சேதமுற்றிருந்தன. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்று மாலை அவ்விடத்திற்குச் சென்று ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஊர்க்குமேரி கடற்றொழிலாளர் சங்கச் செயலர் எஸ்.ரகு மாவை எம்.பியிடம் சேதவிவரங்களடங்கிய மகஜரை கையளிப்பதையும் படத்தில் காணலாம்.

இந்த அனர்த்தம் காரணமாக மாதகல் மீனவர்களுக்கு பல லட்சம் ரூபாவுக்கு மேல் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த சேதங்களுக்காக கடல்வள அமைச்சுடனும் பொது அமைப்புகளுடனும் தொடர்பு கொண்டு உதவிகளைப் பெற்றுத் தருவதாகவும் மாவை எம்.பி. மீனவர்களுக்கு உறுதியளித்தார்.

எதிர்காலத்தில் இப்படியான அழிவுகள் ஏற்படாத வண்ணம் கடற்கரைப் பகுதியில் அணை கட்டுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதாகவும் அவர் தெரிவித்தார். (ய-ரி)

# மோட்டார் சைக்கிளில் வந்தவர் வீதியில் வைத்து வெட்டிக் கொலை!

## மருதனார்மடம் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,மே18

தெல்லிப்பழையில் இயங்கும் புனர்வாழ்வு நிலையத்தின் இணைப்பாளரும் மொழிபெயர்ப்பாளருமான அரியரட்ணம் ஹேமச்சந்திரா (வயது 53) நேற்றுமுன்தினம் இரவு கழுத்து வெட்டப்பட்டு உயிரிழந்தார்.

புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து இரவுவேளை வீடு திரும்பிய சமயம் மருதனார்மடம் - மானிப்பாய் வீதியில வைத்து இவர் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கிறார்.

கழுத்தின் முன்புறமும் பின்புறமும் வெட்டப்பட்டு இரத்தம் வெளியேறிய நிலையில் வீதியோரம் மோட்டார் சைக்கிளுடன் இவரது சடலம் கிடக்கக் காணப்பட்டது.

தகவல் அறிந்த மனைவி, பிள்ளைகள் இரவு 10 மணியளவில் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று சடலத்தைக் கண்டனர். பின்னர் மானிப்பாய் பொலீஸார் சடலத்தை யாழ்.ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்தனர்.

நேற்றுக்காலை யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்ட மல்லாகம் நீதிமன்ற நீதிவான் திருமதி ச.இளங்கோவன், பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சம்பவ இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்ட இறந்தவரின் மனைவியின் வாக்குமூலமும் பதிவு செய்யப்பட்டது.

கழுத்தின் முன்புறமும் பின்புறமும் வெட்டப்பட்ட காயங்கள் சடலத்தில் காணப்பட்டதையடுத்து கொலை எனத் தெரிவித்த நீதிவான், சடலத்தை அவரது மனைவியிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்ததையடுத்து நேற்றுமாலை சடலம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10-15-86)

### பனை வீழ்ந்து குடிசை சேதமடைந்த

# ஆதரவற்ற வயோதிப மாதுவுக்கு விடுதலைப் புலிகள் உதவி!

கடந்த சில தினங்களுக்கு முன்னா வீசிய கடும் காற்றினால் பாறிய பனை மரம் வீழ்ந்து குடிசை சேதமடைந்த கட்டுவன் மேற்குப் பகுதியைச் சேர்ந்த ஆதரவற்ற வயோதிப மாதுவுக்கு விடுதலைப் புலிகள் உதவிகளைச் செய்ததுடன், அவரது குடிசையை மீளமைத்துக் கொடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குடிசைமீது வீழ்ந்த பனை மரத்தைக்கூட அகற்றமுடியாத அநாதரவான நிலையில் கடந்த 5 நாள்களாக பரிதவித்துப்போயிருந்தார் அந்த மாது. அவருக்கு உதவிசெய்ய அப்பகுதி மக்களோ உள்ளூர் மற்றும் வெளியூர் தொண்டு நிறுவனங்களோ முன்வரவில்லை என்பது வேதனைக்குரியது.

இந்தநிலையில், கடந்த 5 நாள்களாகியும் அந்தக் குடிசைமீதிருந்து அகற்றப்படாதிருந்த பனை மரத்தை நேற்றுமுன்தினம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் வெட்டி அகற்றினர்.

அத்துடன், பனை வீழ்ந்து சேதமடைந்த அந்த மாதுவின் குடிசையை மீளமைத்துக் கொடுக்கவும் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். புதிய குடிசை அமைப்பதற்காக மரந்தடிகள் அங்கு கொண்டுவந்து போடப்பட்டுள்ளன. அடுத்த சில நாள்களில் புதிய குடிசை அமைக்கப்படும் என்று தெரிகிறது. (ம-86)

## முன்னாள் மேயரின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,மே18

யாழ். மாநகர முன்னாள் மேயர் சரோஜினி யோகேஸ்வரனின் 5 ஆவது நினைவு தினம் நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். அலுவலகத்தில் இடம்பெற்றது. அவரது திருவுருவப் படத்துக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. (ம)

### யாழ். குடாநாட்டில் இருந்து

# சிமெந்து, எரிபொருள்களை வன்னிக்கு எடுத்துச் செல்ல அனுமதி வேண்டுமாம்

யாழ்ப்பாணம்,மே18

சிமெந்து, பெற்றோல், டீசல் ஆகியவற்றை அரச அதிபரின் அனுமதியின்றி வன்னிக்கு எடுத்துச்செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது என அறிவுறுத்தும் அறிவித்தல் பலகை ஒன்று முகமாலை இராணுவ சோதனைச் சாவடியில் நடப்பட்டுள்ளது.

அந்த அறிவித்தல் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஆயுதங்கள், வெடிமருந்துகள், தொலைநோக்கி(டெலஸ்கோப்) என்பனவற்றை வன்னிக்கு எடுத்துச்செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்பதுடன், பெற்றோல், டீசல், சிமெந்து என்பனவற்றை அரச அதிபரின் அனுமதியின்றி எடுத்துச்செல்லமுடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-8)

# வலிகாமம் வடக்கு மக்களின் மறியல் போர் பற்றி விளக்கம்

வலி.வடக்கு,மே18

வலி.வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கக் கோரும் மறியற்போராட்டம் தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டங்களும் கலந்துரையாடல்களும் வலிகாமம் பகுதியில் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், கோப்பாய் மற்றும் வலி.வடக்கு மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகள் ஆகிய இடங்களில் இந்தப் பிரசார செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போதைய நிலையில் வலி. வடக்கு மக்கள் மீளக்குடியமர்வதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி இந்தக் கூட்டங்களிலும் கலந்துரையாடல்களிலும் விளக்கப்படுவதுடன், அந்த நடவடிக்கைகளில் மக்களின் பங்களிப்புப் பற்றியும் வலியுறுத்தப்படுகின்றன.

இந்தப் பிரசாரப் பணியில் பொது அமைப்புக்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் மற்றும் வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வசிக்கும் மக்கள் ஆகியோர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்குமாறுகோரி திங்களன்று செயலகம் முன் இடம்பெறவுள்ள மறியற்போராட்டத்துக்கு சண்டிலிப்பாய், சங்கானை, கோப்பாய், உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட பல்வேறு பொது அமைப்புக்களும் ஆதரவு வழங்க முன்வந்துள்ளன. (ம-86)




யாழ்.புனித யுவானியார் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற சமாதானத்தைத் தொடரக் கோரும் பிரார்த்தனையிலும் அடையாள உண்ணாவிரதத்திலும் ஈடுபட்ட மக்கள் மத்தியில் மனித முன்னேற்ற நடுநிலையத்தைச் சேர்ந்த வண பிதா ஜெயக்குமார் உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

# சமாதான முயற்சிகளை துரிதப்படுத்தக் கோரி நகரில் நேற்று பிரார்த்தனை, உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்,மே18

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளை துரிதப்படுத்தவேண்டும் எனக் கோரி யாழ்.புனித யுவானியார் ஆலய வளவில் நேற்று நூற்றுக்கணக்கான மக்கள் அமைதிப் பிரார்த்தனையிலும் அடையாள உண்ணாவிரதத்திலும் ஈடுபட்டனர்.

யாழ்மனித முன்னேற்ற நடுநிலைய சமாதான உயிர்ப்பூட்டல் குழுவினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பிரார்த்தனையும் அடையாள உண்ணாவிரதமும் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகின. இதில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மற்றும் பௌத்த மதத் தலைவர்களுடன் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இவர்கள் அனைவரும் சமாதான முயற்சிகள் துரிதமாக இடம்பெறவேண்டும் எனவும், அவை எவ்வித தடங்கலும் இன்றி நல்லமுறையில் தொடரவேண்டும் எனவும் அமைதிப்பிரார்த்தனையில் ஈடுபட்டனர். பிற்பகல் 3.30 மணி வரையும் இடம்பெற்ற பிரார்த்தனையையும், அடையாள உண்ணாவிரதத்தையும் மதத் தலைவர்கள் அனைவரும் இணைந்து குளிர்பானம் வழங்கி முடித்துவைத்தனர்.

இறுதியாக பிரம்மஸ்ரீ பாலக்ஷ்மண ஐயர், யாழ்மறைமாவட்ட குரு முதல்வர் ஜே.நீக்கிலஸ், யாழ்நாகவிகாரையின் பிரதம குரு ஞானரத்ன தேரர், மௌலவி ஏ.ஜி.எம்.இர்பான், வண. பிதா சி.ஜி.ஜெயக்குமார் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

சமாதான முயற்சிகளைத் துரிதப்படுத்தக்கோரும் தமிழ் மக்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சியின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் ஆகியோருக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, ஆயர் மன்றம் ஆகியவற்றுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

அந்த மகஜரில் -

"அரசு - விடுதலைப் புலிகள் இடையிலான சமாதானப் பேச்சுக்களில் காலதாமதம் ஏற்படுவதால் ஏற்படும் வேதனையும் விரக்தியும், நம்பிக்கையீனமும் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் நடைமுறைப் படுத்தப்படாமல் இருப்பதும் சமாதான முயற்சிகள் இன்று பயனற்றதாகி விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. மக்களின் இந்த ஐயத்தை தங்கள் கவனத்துக்கு முன்வைக்கின்றோம்.

"சமாதானப் பேச்சுக்களின் முன்னெடுப்புக்கள் நின்றுவிடாது, அதனை விரைவுபடுத்தவும் சுயகௌரவத்துடனான - நீதியான - நிரந்தர சமாதானத்துக்கு நடைமுறையில் மக்கள் அனுமதிக்கவும் தங்களின் பங்களிப்பைக் கோரி நிற்கின்றோம்." - என்றுள்ளது. (ஐ-10-31)

# மொரோக்கோவில் ஐந்து இடங்களில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள்!

## ஒரே இரவில் நிகழ்ந்த பயங்கரம் 38 பேர் பலி! 100 பேர் காயம்!!

காஸாபிளாங்கா,மே18

**வடமேற்கு ஆபிரிக்க நாடான மொரோக்கோவில் முக்கிய வர்த்தக நகரமான காஸாபிளாங்காவில் நேற்றுமுன்தினம் இரவு தொடர்ச்சியாக நடத்தப்பட்ட ஐந்து பெரும் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களினால் அங்கு பேரழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. 38இற்கும் மேற்பட்டோர் மாண்டிருக்கின்றனர். நூறுபேர் வரை காயங்களுக்குள்ளாகினர்.**

வெடிகுண்டுத் தாக்குதலை நடத்திய 10 தற்கொலைப்படை தீவிரவாதிகளும் மரணமடைந்தனர் என்று கூறப்படுகிறது.

காஸாபிளாங்கா நகரில் 5இடங்களில் ஒரே நேரத்தில் தாக்குதல்கள் நடைபெற்றது. இதில் 3கார் வெடிகுண்டுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதில் பெல்ஜியம் தூதரகம், யூத மையம் மற்றும் பிரபல ஹோட்டல் ஒன்றும் அடங்கும்.

யூத மையத்தில் தற்கொலைப் படைத் தாக்குதலில் ஈடுபட்ட 2தீவிரவாதிகளின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

இது சர்வதேச தீவிரவாதிகளின் நாசவேலை என்று மொரோக்கோவின் உள்துறை அமைச்சர் முஸ்தபா சாகில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

கடந்த சில நாள்களுக்கு முன்பு சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் தொடர்ச்சியாக கார் குண்டுகள் வெடித்தன. இந்தக் குண்டுவெடிப்பில் 100பேர் வரை பலியானார்கள். இதில் 10பேர் அமெரிக்கர்கள். அல்கெய்டா தீவிரவாதிகள் இந்த குண்டு வெடிப்புக்கு பொறுப்பேற்று இருந்தனர். இது போன்ற தாக்குதல்கள் தொடரும் என்று அல்கெய்டா தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்திருந்தனர்.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் ஆபிரிக்காவின் வடமேற்கு பகுதியில் உள்ள மொரோக்கோவில் காசாபிளாங்காவில் தொடர்ச்சியாக குண்டுகள் வெடித்து பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

கார்களில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் திடீரென்று வெடித்தன. இதுதவிர வெடிகுண்டுகள் ஏற்றப்பட்ட கார்களை முக்கிய கட்டடங்கள் மீது மோத வைத்து அல்கெய்டா தீவிரவாதிகளின் தற்கொலைப் படையினர் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். மொத்தம் நான்கு தடவைகள் இந்தத் தாக்குதல் நடந்தது.

இந்தத் தாக்குதலில் மொரோக்கோ நாட்டவர்கள் மட்டுமன்றி ஸ்பெயின், பெல்ஜியம், அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் 38 பேர் பலியானார்கள்.

இந்த தாக்குதலில் காஸாபிளாங்காவில் உள்ள பெல்ஜியம் நாட்டு தூதரகம் தரைமட்டமானது. ஸ்பெயின் நாட்டின் கலாசார மையம் ஒன்றும் தகர்க்கப்பட்டது. இந்த மையத்தில் காவலுக்கு நின்ற ஒரு பொலீஸார் மற்றும் ஒரு காவலாளியும் பலியானார்கள்.

இதில் பலியான அமெரிக்க நாட்டவர்கள் எத்தனை பேர் என்பது இன்னும் சரியாக தெரியவில்லை. இந்த வெடிகுண்டு தாக்குதல் தொடர்பாக இதுவரை 3பேரை மொரோக்கோ பொலீஸார் கைது செய்துள்ளனர்.(ஐ)



தாக்குதலில் சேதமடைந்த கட்டடம்.



குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த சிலரின் சிதறியஉடல் அவயவங்கள்.

## வேண்டுமென்றே நோய்களை பரப்பினால் கடும் தண்டனை

### சீன உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

பெய்ஜிங்,மே18

'சார்ஸ்' உட்பட எந்தத் தொற்று நோயையும் வேண்டுமென்றே பரப்பினால் அவர்களுக்கு கடும் தண்டனை விதிக்கப்படும். மரணதண்டனை கூட விதிக்கப்படலாம் என்று சீன உச்ச நீதிமன்றம் வியாழக்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

இதற்கிடையில், 'சார்ஸ்' தொடர்பான புள்ளிவிவரங்களில் தில்லுமுல்லு செய்யும் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் வென்ஜியாபோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

'சார்ஸ்' தொடர்பான புள்ளி விவரங்களில் தில்லுமுல்லு செய்ய எந்த ஓர் அமைப்பையோ அல்லது தனி மனிதனையோ அனுமதிக்கமாட்டோம் என்ற வியாழக்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் வென் பேசியதாக அரசு நாளேடு தெரிவித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் தலைநகர் பெய்ஜிங்கிலும் வெகு வேகமாகப் பரவிவந்த சார்ஸ் நோய் தொடர்பான தகவல்களை மறைத்ததற்காக சுகாதார அமைச்சரையும், பெய்ஜிங் நகர மேயரையும் கடந்த வாரம் பதவியிலிருந்து தூக்கியெறிந்தார் பிரதமர் வென். (ஐ)

## ஈ-ராக் மனித புதைகுழிகளை பாதுகாக்க வேண்டுகோள்!

ஈராக்கில் அண்மையில் கண்டுபிடிக்கபட்ட சவக்குழிகளைப் பாதுகாக்குமாறு ஈராக்கில் உள்ள அமெரிக்கக் கூட்டணிப் படைகளை ஐ.நா. சபை கேட்டுக்கொண்டுள்ளது.

பதவி நீக்கம் செய்யப்பட்ட ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் அரசால் மனித உரிமைகள் அத்துமீறப்பட்டதற்கான சாட்சியங்களாக அவை இருப்பதற்காக சவக்குழிகளை பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஐநாவின் மனித உரிமைகளுக்கான ஆணையர் செர்ஜியோ வியாரா டி மெல்லோ வியாழக்கிழமை அறிக்கை வெளியிட்டுள்ளார்.

ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சியில் மனித உரிமைகள் மீறப்பட்டதற்கான சாட்சியங்கள் யாவும் இலலாதநிலையில், தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள சவக்குழிகள் உடனடியாகப் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

மனித உரிமை அத்துமீறல்களையும், சர்வதேசச் சட்டத்தையும் பல ஆண்டுகளாக ஈராக் அரசு மீறிவந்துள்ளதற்கான சாட்சியங்களாக இந்தப் புதிய தகவல்கள் இருக்கும் என்றார்.

ஈராக்கில் பல்வேறு இடங்களில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பெரிய, பெரிய சவக்குழிகளில் இருநது காணாமறபோனவர்களின் சடலங்களை உறவினர்கள் தேடிக் கண்டுபிடித்து சம்பிரதாயச் சடங்குகளை மேற்கொள்ளுவதற்காக எடுத்துச் செல்கின்றனர். (ஐ)




என்னைப் பார்.... என் அழகைப் பார்.... இந்த அழகிகள். 'மிஸ் யூனிவேர்ஸ்' உலக அழகி போட்டி அடுத்த மாதம் 3ஆம் திகதி பனாமாவில் நடக்கிறது. இதில் கலந்துகொள்ள சென்ற அருபா அழகி மலாய்கா, ஆர்ஜென்ரீனா அழகி லாரா ரோமிரோ, கனடா அழகி மாரிசெசில், சிங்கப்பூர் அழகி பெர்னீஸ்வாங், கோஸ்டாரிக்கா அழகி ஆண்ட்ரீ ஓவரஸ் ஆகியோர் நீச்சல் உடையில் தோன்றும் காட்சி. (ஐ)

## பிரான்ஸில் பஸ் விபத்தில் ஜேர்மனியர் 28 பேர் பலி!

பாரிஸ்,மே18

பிரான்ஸின் தென்கிழக்குப் பகுதியில் ஜேர்மன் நாட்டு உல்லாசப் பயணிகளை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்று தடம்புரண்டதில் 28பேர் உயிரிழந்தனர். 40பேர் காயமடைந்தனர்.

விடுமுறைக் காலத்தைக் கழிப்பதற்காக ஸ்பெயின் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஜேர்மன் பிரஜைகளே இந்த விபத்தில் சிக்கியிருக்கின்றனர்.

விபத்து நடந்தவேளை வண்டியில் 78பயணிகள் வரை இருந்தனர் பெரும்பாலானோர் தூக்கத்தில் இருந்தனர். வண்டி தடம் புரண்டபோது அவர்களில் பலர் தூக்கி வீசப்பட்டு வண்டிக்கு வெளியே வீழ்ந்து மரணமாகினர். சாரதிகள் மற்றும் சுமார் 20பேர் தடம்புரண்ட வண்டியினுள் பல மணிநேரமாக சிக்குண்டிருந்தனர். பின்னர் அவர்கள் மீட்கப்பட்டு ஹெலிகொப்டர் மூலம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு விரையப்பட்டனர். தென்கிழக்குப் பிரான்ஸில் லியோன் நகருக்கு அருகே 'ஏ-6' மோட்டார் நெடுஞ்சாலையில் இந்த விபத்து நடந்தது. இந்த அனர்த்தம் தொடர்பாக பிரான்ஸ் பொலீஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர். (ஐ)



தடம்புரண்ட பஸ்.

## மெக்காவில் ஏற்பட்ட தீ விபத்தில் 14பேர் மரணம்!

ரியாத்,மே18

சவூதி அரேபியாவில் முஸ்லிம்களின் புனித நகரமான மெக்காவில் ஒரு கட்டடத்தில் தீ விபத்து ஏற்பட்டதில், 14பேர் உயிரிழந்தனர்; 27 பேர் காயமடைந்தனர்.

அவர்களில் பெரும்பாலானோர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

அந்தக் கட்டடத்தில் முஸ்லிம் யாத்திரிகர்கள் தங்கியிருந்தனர்.

கட்டடத்தின் கீழ் பகுதியில் ஏராளமான பாய்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதில் திடீரென தீப்பிடித்தது.

மேல் மாடிகளுக்கும் தீ பரவியதால் அங்கு தங்கியிருந்த பலர் தீயில் சிக்கினர். (ஐ)

## 'தேவதாஸ்' இந்தி படத்துக்கு 9 தொழில்நுட்ப விருதுகள்

தென்னாபிரிக்காவில் உள்ள ஜோகன்னஸ்பேர்க்கில் சர்வதேச இந்திய திரைப்பட அக்கடமியின் விருது வழங்கும் விழா நடைபெற்றுவருகிறது. இதற்காக இந்தி நடிகர், நடிகைகள் பலர் அங்கு குவிந்துள்ளனர்.

இந்தப் படவிழாவில் பல கோடி ரூபா செலவில் தயாரிக்கப்பட்ட தேவதாஸ் திரைப்படத்திற்கு 9 தொழில்நுட்ப விருதுகள் வழங்கப்பட்டன.

சாத்தியா படத்துக்கு இசையமைத்த ஏ.ஆர் ரகுமானுக்கு சிறந்த இசையமைப்பாளருக்கான விருது வழங்கப்பட்டது. விழாவை மந்திரா பேடி தொகுத்து வழங்கினார். (ஐ)



சர்வதேச இந்திய திரைப்பட விருது வழங்கும் விழா தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பேர்க் நகரில் நடக்கிறது. இதில் கலந்துகொள்ளச்சென்ற நடிகர் அமிதாப் பச்சனை ஏராளமான இந்திய ரசிகர்கள் சூழ்ந்து கொண்டனர். அவர்களுக்கு அமிதாப்பச்சன் ஆட்டோ கிராபில் கையெழுத்து இடும் காட்சி. (ஐ)

## 'நியாப்' திட்டத்தின் கீழ் குளங்கள் புனரமைப்பு

வலி.தெற்கு,மே18

'நியாப்' திட்டத்தின் கீழ் இவ் வீருடம் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள தாமரைக் குளம், கரப்பிட்டியாகுளம், உடுவில் குளம் என்பன புனரமைப்புச் செய்யப படவுள்ளன.

அத்துடன், கந்தரோடை குண்டுக் குளம் உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட உள் ளது. விவசாய வீதிகள் பலவற்றை யும் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக் கப்பட்டது. (எ-152)

## வலி.தென்மேற்கில் நான்கு வீதிகள் புனரமைக்கப்படும்

வலி.தெற்கு,மே18

உலக உணவுத் திட்டத்தின்கீழ் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட நான்கு வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட வுள்ளன.

கடந்த பல வருடங்களாக புனர மைப்புச் செய்யப்படாமல் இருந்தமை யால் மழைகாலத்தில் இந்த வீதி களூடாகப் போக்குவரத்துச் செய் யும் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது என் றும் -

இந்த நிலை சுட்டிக்காட்டப்பட்ட தையடுத்து இவ்வீதிகளைப் புனர மைப்புச் செய்ய நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது என்றும் - கூறப் பட்டது.

சண்டிலிப்பாய் மத்தி, சவாரி டச்சு வீதி, பண்டத்தரிப்பு ஏருபுளியடி வீதி, மாதகல் வேலவன் வீதி மற்றும் பிரான்பற்று பாத்திமா வீதி முதலாம் ஒழுங்கை என்பவையே இவ்வாறு உலக உணவுத் திட்டத்தின் கீழ் சிரமதான அடிப்படையில் புனரமைப் புச் செய்யப்படவுள்ளன.

(எ-152)

## பால் சேகரிப்பு நிலையங்களை அமைத்து தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே18

வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் இரண்டு பால் சேகரிப்பு நிலையங் களை அமைத்துத் தருமாறும் -

இப்பகுதியில் உள்ள கால்நடை களின் மேய்ச்சலுக்குக்கேற்ற வகை யில் மேச்சல் தரையொன்றையும் அமைத்துத்தருமாறு வலிகாமம்தெற்கு பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரிவு கால் நடை வைத்திய அதிகாரி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இணுவில், சுன்னாகம் போன்ற இடங்களில் உள்ள பண்ணையாளர் களிடமிருந்து பாலைக் கொள்வனவு செய்வதற்கு வசதியாக பால் சேக ரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமெனவும் -

கால்நடைகளின் மேய்ச்சலுக்கேற்ற மேய்ச்சல் தரையொன்றும் அமைக் கப்பட வேண்டும் என்றும் - வேண்டு கோள் விடுத்துள்ளார். (எ-152)

## மூன்றுநாள் காய்ச்சலில் சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம்,மே18

மூன்றுநாள் காய்ச்சலை அடுத்து சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு எடுத்து வந்தபோது இடைவழியில் இறந்துவிட்டதாகத் தெரிவித்து இரண்டரை வயதுச் சிறுவனின் சட லம் ஒன்று நேற்று முன்தினம் பெற் றோரால் யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

ஆனைக்கோட்டை கூழாவடியைச் சேர்ந்த யூலியன் அலெக்ஷன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவ னாவான்.

மூன்றுநாள் காய்ச்சலை அடுத்து யாழ்.போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் கடந்த வியாழனன்று மருந்து எடுத்துச் சென்றதாகவும் -

மருந்தைக் கொடுத்தும் காய்ச் சல் குறையாது சிறுவன் சோர்வ டைந்ததை அடுத்து ஆஸ்பத்திரிக் குத் திரும்ப எடுத்து வந்ததாகவும்- வரும் வழியிலேயே இச்சம்பவம் நிகழ்ந்ததாகவும் தாயாரால் தெரிவிக் கப்பட்டது.

மரண விசாரணையின் பின்னர் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டது. (எ-10-15)

## முக்கிய அறிவித்தல்

கொழும்பு கின்ரோஸ் அவன்யு (Kinross Avenue) லொச்சில் தங்கி இருந்த, ஏப்ரல் முதலாம் திகதி வென்னப்பு விபத்தில் காயமடைந்த திரு.சுப்பிர மணியம் செல்வகுமார் என்பவரை இல.37, பர்னான்டோ வீதி, வெள்ளவத்தையில் வசிக்கும் வான் உரிமையாளர் திரு.சுப்ரமணியம் தனது வான் காப்புறுதி சம்பந்தமாக தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறார்.

T.P. 360323

Hand Phone No.0777 - 686582

குறிப்பு: இவர் கொழும்புக்கு வரத்தேவையில்லை.

(சி-27935)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1964 - 09 - 09

உதிர்வு 2000 - 05 - 21

### திருமதி கிருஷ்ணானந்தன் இந்திரா

சுந்தரம் நிறைந்த எமது இல்லத்தரசியே இந்திரா!
உந்தன் நினைக்கையிலே உள்ளமே கலங்குதையோ!
எந்தனை விட்டு ஏனோ பிரிந்துதான் நீயும் சென்றாய்?
இந்த நாளில் உன்னை நினைந்து நிதம் ஏங்குகின்றோமே!

முகவரி: மீசாலை மேற்கு, மீசாலை.

தகவல்: கணவர், பிள்ளைகள்.

(சி-17980)



## அதிபோஷாக்கு மிக்க உன்னத பானம்

# PROVIN-X

புரோவினெக்ஸ் இல் 16 வகையான விற்றமின்களும் மேலதிக கனியுப்புக்களும் அடங்கியது

- இழந்த சக்தியை விரைவாக மீட்டெடுத்தல்
- நோய்வாய்ப்பட்டோர் உடன் புத்துணர்வு பெற
- கண்பார்வை சக்தியை அதிகரித்தல்

மேலும் விளையாட்டு வீரர், கர்ப்பிணித்தாய்மார், வளரும் பிள்ளைகள், வயோதிபர் உட்பட முழுக்குடும்பத்துக்கும் ஏற்ற சிறந்த பானம்




யாழ். முகவர்:
ஜெகன் பார்மஸி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 3191

வன்னி முகவர்:
அகிலன்ஸ் பார்மஸி
(பிள்ளையார் மருந்தகம்)
கிளிநொச்சி.



இலங்கையில் சந்தைப்படுத்துவோர்:
ARKEM COLOMBO
T.P.: 470290, 075 344436
E-mail: arkem@sltnet.lk

(சி27133)

PROVIN - X தற்போது அனைத்து முன்னணி பார்மஸிகளிலும் பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.



## உலகப் புகழ்பெற்ற இமாமி தயாரிப்புகள் இப்பொழுது... யாழ்.நகரிலும்!




# இமாமி

நேச்சுரலி ஃபேயர் பேர்ல்ஸ்

- அசல் முத்துக்களும்
- 11 அரிய மூலிகைகள் கொண்ட

சிவப்பழகு கிறீம்




பாவிப்பதனால்

- முகப்பரு அடையாளங்கள் கொண்ட சருமம் என்ற கவலை இனி இல்லை
- கண்ணின் கீழ் கருவளையம் இனி இல்லை
- முகத்தில் கரும்புள்ளிகள் இனி இல்லை

அழகிய வெண்மையான மிருதுவான சருமம் 6 வாரங்களில்!

வாங்குவோருக்கு Vitmine & Gell இலவசம்

சந்தைப்படுத்துவோர்:
HARCOURTS(PRIVATE)LTD.
No:14, Station Road, Dehiwala.
T.P: 074 - 200063 074 - 200064



# ஹிமானி

GOLD TUMERIC CREAM

- கஸ்தூரி மஞ்சள்
- தங்கத் தூள்
- குங்குமப் பூ
- அரிய மூலிகைகள்

ஆயுர்வேத் கிறீம்

- நச்சுத்தன்மை அகற்றி பொலிவான முகத்தோற்றம்
- சுன்றும் இளமையான சருமம்
- பாதுகாப்பற்ற சருமம்

தங்கத்தூள் அடங்கிய Yell இலவசம்

யாழ்.முகவர்:
JEGHAN PHARMACY
ஜெகன் பார்மஸி
462/8, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021- 2222194

(சி-27060)

# உதயன்

## உலகை உலுப்பும் தற்கொலைத் தாக்குதல்கள்

இப்போதெல்லாம் பத்திரிகைகளைப் புரட்டினால் அல்லது செய்தி ஊடகங்களைப் பார்த்தால் உலக நாடுகள் எங்கும் அடுத்தடுத்து நடக்கும் தற்கொலைக் குண்டுத தாக்குதல்கள் பற்றிய செய்திகள்தான்.

இலங்கைக்குப் பின்னர் பாலஸ்தீனத்துக்கு மட்டும் உரியதாக இருந்த இத்தகைய தாக்குதல்கள் இப்போது உலகின் பல நாடுகளுக்கும் உரியனவாக மாறி வருகின்றன.

சவூதி அரேபியா, செச்னியா, மொறக்கோ என்று பல இடங்களிலும் அடுத்தடுத்து நடக்கும் தற்கொலைத் தாக்குதல்கள் உலகையே உலுப்பியுள்ளன.

எடுத்த எடுப்பிலேயே இத்தகைய கொடூரத் தாக்குதல்கள் நியாயமானவை என்றோ அல்லது அநியாயமானவை என்றோ கூறிவிட முடியாது.

அப்பாவிகளின் உயிர்களைக் காவு கொள்ளும் இத்தகைய தாக்குதல்களை நடத்துவோர், தங்களது உயிரையும் துச்சமென மதித்துத் தூக்கியெறிகிறார்கள். வல்லாதிக்க அமெரிக்காவும் அதன் நேச அணிகளும் "விரக்தியுற்றிருக்கும் பயங்கரவாதிகள் வேறு வழியின்றி நடத்தும் கொடூர - பயங்கரவாத - செயல்கள் இவை" என்று கூறுவது போல, இவற்றைக் கருதி அடியோடு ஒதுக்கிவிடவும் முடியாது.

"சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி!" என்பது போல அடங்கிக்கிடந்த இஸ்லாமிய தீவிர வாதத்தை ஊதிக் கெடுத்திருக்கின்றது அமெரிக்கா. அதன் விளைவு உலகையே ஆட்டிப் படைக்கின்றது.

"தென்னையில் தேள் கொட்டப் பனையில் நெறி கட்டியது போல" ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் அமெரிக்கா தனது ஆக்கிரமிப்பைக் காட்ட, அதன் விளைவுகள் இஸ்ரேலிலும், சவூதி அரேபியாவிலும், செச்னியாவிலும், மொறக்கோவிலும் வெடித்திருக்கின்றன. இன்னும் எத்தனை நாடுகளில், எத்தனை அப்பாவிகளின் உயிர்களையும் உடைமைகளையும் அது காவு கொள்ளப் போகின்றதோ என்ற அச்சம் பலருக்கு.

அமெரிக்காவுடன் சேர்ந்து சந்நதம் கொண்டு ஆடிக் குதித்துவரும் பிரிட்டன், இந்தத் தற்கொலைத் தாக்குதல் பீதி காரணமாக கென்யா உட்பட பல நாடுகளுக்கான தனது விமான சேவையைத் துண்டிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.

உலக நாடுகள் பலவற்றிலும் தீவிரவாதத் தாக்குதல்களை நடத்தி பயங்கரமாகத் தலைவிரித்தாடும் 'அல்-ஹெய்டா' போன்ற தீவரவாத அமைப்புகளின் செயற்பாடுகளை நியாயப்படுத்தவோ அல்லது இஸ்லாமியத் தீவிர வாதத்தின் பக்கம் உள்ளதாகக் கூறப்படும் நியாயங்களைப் பிரசாரப்படுத்துவதோ எமது நோக்கமல்ல.

ஆனால், வெறும் ஆயுத பலத்தை - சர்வதேச வல்லாதிக்கத்தை - மட்டும் வைத்துக்கொண்டு, ஓரின மக்களின் நியாயபூர்வமான உணர்வுகளை - அபிலாசைகளை - மதிக்காமல், அவர்களை ஆயுதமுனையில் அடக்கி விடலாம் என்று எண்ணுவது - அது நாட்டுக்குள்ளானாலும் சரி, சர்வதேச ரீதியிலானாலும் சரி - விபரீத விளைவுகளைத்தான் தரும் என்பதை சகலரும் புரிந்துகொள்ள முன்வரவேண்டும் என்பதுதான் எமது கருத்து.

இங்கொன்றும் அங்கொன்றுமாக - எப்பெப்போதோ - நடைபெறும் தற்கொலைத் தாக்குதல்கள் வேறு. தொடர்ச்சியாக ஒரு குழுமத்தினர் அல்லது அணியினர் அல்லது இனத்தினர் உயிராயுதமான தற்கொலைத் தாக்குதல்களை பொது இலக்கு ஒன்றை அடைவதற்காக நடத்துவது வேறு.

பின்னைய வரிசையை வெறிகொண்ட ஒரு கும்பலின் அராஜகம் என்று அமெரிக்கா கூறுவது போல நாம் கருதி ஒதுக்கிவிட முடியாது.

ஆயுதமுனையில் அடக்கப்பட்ட மக்களின் புரட்சிப் பொறியாக தற்கொலைத் தாக்குதல்கள் வெடிப்பதை நாம் காண்கிறோம்.

தன்னைச் சார்ந்தோருக்காக - தன் மக்களுக்காக - தனது உயிரையே துச்சமென மதித்து - எதிரிக்குப் பேரிழப்பை ஏற்படுத்தி - தன்னையே ஆகுதியாக்கும் ஓர் ஈகையாளனின் மன உணர்வுகளுக்குப் பின்னால் பொதிந்து கிடக்கக்கூடிய ஆழமான எண்ணக்கருக்களையும் - நியாயங்களையும் - உலகம் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

"வல்லரசுகள் வைத்ததுதான் சட்டம்; வகுத்ததுதான் நீதி" என்ற கொள்கை உலக மக்கள் மீது திணிக்கப்படும் ஒரு வலோற்கார நிலை உலகில் காணப்படுகின்றது. வல்லாதிக்கத்துக்கும் அந்த சக்திகளின் 'பிச்சை'க்கும் கையேந்திக் காவல் இருக்கும் இறைமை உள்ள நாடுகள் இந்த வலோற்காரப் போக்கை உலக நீதி இதுதான் என அங்கீகரித்து நிற்கையில் நியாயம் - நீதி - தர்மம் - நிலைநாட்டப்படுவது கேள்விக்குறியே. அத்தகைய நிலைமை நீடிக்கும் போது இவ்வாறான தற்கொலைத் தாக்குதல்களும் குறையமாட்டா. அவற்றின் பின்னால் இருக்கக் கூடிய, மக்களின் மன விரக்தியும் உலகிற்குப் புரிய மாட்டாது.

நோய்க்கான காரணியை அடையாளங்கண்டு நோயைத் தீர்ப்பது போல இத்தகைய தற்கொலைத் தாக்குதல்களுக்கு தூண்டும் காரணியாக அமைந்திருக்கும் அடிப்படையயைக் காண சர்வதேச சமூகம் விளையவேண்டும். - வெறுமனே தற்கொலைத் தாக்குதல்களை 'கொடூர பயங்கரவாதச் செயல்கள்' என்று விமர்சிப்பதோடு நின்று விடுவதை விடுத்து.

# அடுத்த மாதம் முதல் இரு வாரங்களும் சுற்றாடல் தின வாரமாக அனுஷ்டிக்கப்படும்

### சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு வேலைத் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,மே18

தமிழர் பிரதேசங்களில் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை உலக சுற்றாடல் தினவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டுவருகிறது.

பாரிய சமூக, பொருளாதாரப் பிரச்சினையாக உருவெடுத்து வரும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பாக பெரும் விழிப்புணர்வைத் தட்டி எழுப்புவதை நோக்கமாகக் கொண்டு இக்காலப் பகுதியில் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

'சூழல் நலன் பேணல் நிறுவனம்' என்ற பெயரில் சூழல் பாதுகாப்பு நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருகிறது.

உலக சுற்றாடல் தின வாரம் தொடர்பாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டிருக்கும் செய்திக்குறிப்பு வருமாறு:-

உலக சூழல் தினத்தை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் தலைமையில் (09.05.2003) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் பல்கலைக்கழக மூதவை மண்டபத்தில் துறைசார்ந்த விரிவுரையாளர்கள், அரச. அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் பொருண்மிய மதியுரையக இயக்குநர் மா.செல்வேள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ். மாவட்டப் பொறுப்பாளர் தி.ஞானவேல் ஆகியோரும் சமூக நலன் விரும்பிகளும் கலந்துகொண்டு இன்றைய காலகட்டத்தில் யாழ்குடாநாட்டின் சூழல் பாதுகாப்புத் தொடர்பான கருத்துரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினர்.

சூழல் பாதுகாப்பானது பாரிய சமூக பொருளாதாரப் பிரச்சினையாகக் காணப்படுகிறது. சூழல் மாசடைதல் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. இவற்றைத் தடுப்பதற்கு நாம் தனிப்பட்ட, சமூக, திணைக்கள, பல்கலைக்கழக, பாடசாலை மட்டங்களில் திட்டங்களைத் தீட்டி தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கிய பிரமுகர்கள் தெரிவித்தனர்.

இன்று உலக நாடுகள் சூழல் பாதுகாப்பிறகாக பல மில்லியன் ரூபாவை அரச, தனியார் நிறுவனங்கள் மூலம் செலவு செய்து சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் இக்காலகட்டத்தில் நமது நாடும் நாமும் இவ்விடயத்தில் அக்கறை குன்றியவர்களாகவே காணப்படுகின்றோம். இந்நிலை மாற்றப்படவேண்டும். இதற்காக நாம் பல்வேறு திட்டங்கள் மூலம் சூழல் பாதுகாப்பை மேற்கொள்ள பின்வரும் தீர்மானங்கள் கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டது.

இதன் பிரகாரம் ஜூன் 1-14ஆம் திகதி வரையான இரு வாரங்களும் உலக சுற்றாடல் தின வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் இக்காலப்பகுதி கொடிவாரமாகவும் அனுஷ்டிக்கப்படும்.

'சூழல் நலன் பேணல் நிறுவனத்தை' அங்குரார்ப்பணம் செய்தலும் இந்நிறுவனத்தினூடாக -

1. பத்திரிகை, தொலைத் தொடர்பு ஊடகங்கள் வாயிலாக சூழல்பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தல் -

2. சூழல் பாதுகாப்புத் தொடர்பாக அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைத்து கருத்தரங்குகள், பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்-

3. சூழல் பாதுகாப்பு பற்றிய ஆய்வரங்கு நடத்துதல் -

4. பயன்தரும் மரநடுகைத்திட்டம்.

5. பொது இடங்களில் சிரமதானம.

ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்

அத்தோடு, எமது சூழல் பாதுகாப்பினை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் நீண்ட காலத் திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செயற்படுத்தத் தேவையான நிதி மூலங்களைக் கண்டறிந்து அத்திட்டங்களை நிறைவேற்றுதல் போன்ற பல தீர்மானங்கள் ஆராயப்பட்டன.

எனவே, சூழல் தினத்தை முன்னிட்டு நடைபெற இருக்கின்ற நிகழ்வுகளுக்கு அனைத்து நிறுவனங்களும், புத்திஜீவிகளும், நலன்விரும்பிகளும் நமது நாட்டின் சூழல் பாதுகாப்பைப் பேண ஒன்றிணைவோம் - இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பல்கலையின் மீன்பிடி வளாகத்தை மன்னார் மாவட்டத்தில் நிறுவுக!

### அடைக்கலநாதன் எம்.பி. அமைச்சர் காஸிமிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே18

யாழ்.பல்கலைக்கழகத்தின் மீன்பிடி வளாகத்தை மன்னாரில் அமைக்கவேண்டும் என்று வன்னிமாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரியுள்ளார்.

மூன்றாம் நிலைக்கல்விக்கும் தொழில் பயிற்சிக்குமான அமைச்சர் கபீர் காஸிமுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மன்னார் மாவட்டத்திலுள்ள மக்களது பிரதான தொழில்கள் மீன்பிடியும், விவசாயமுமாகும். இம்மாவட்டம் யாழ்பல்கலைக்கழகதின் மீன்பிடி பகுதிக்கான வளாக அமைப்புக்கு மிகவும் பொருத்தமான இடமென்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குகொண்டுவர விரும்புகின்றேன்.

மேற்படி மாவட்டத்தின் அமைவிடம், அருவிகள் கலக்கும் வண்டல் பிரதேசங்கள், குடாக்கள், அரபிக்கடல் சங்கமிக்கும் பகுதியில் அமைந்திருத்தல், கண்டத்திட்டினையும், கடலடித்தள மேடையினையும், சேற்றுப்பகுதி, மணல்பகுதி, தீவுப்பகுதியின் கிழக்கு, மேற்கான அமைப்பு வடகீழ் பருவப்பெயர்ச்சி காலவேளையில் தென்பகுதிக் கடலிலும் தென்கீழ் பருவப்பெயர்ச்சிக் காலத்தில் வடபகுதிக் கடலிலும் மீன்பிடித் தொழிலை நடத்தமுடியுமென்ற நிலையில், இலங்கையின் ஏனைய மாவட்டங்களிலும் பார்க்க இம்மாவட்டம் சிறந்து விளங்குகிறது.

பாக்குநீரிணைப் பகுதியில் பாரிய நீரோட்டம் காணப்படுவதும், உவர்நீர் ஏரிகளும் குடாக்களும் இப்பகுதி மீன்பிடித் தொழிலுக்கு மிகவும் பொருத்தமானதென்பதை எடுத்துக்காட்டுகின்றன.

மன்னார் கடற்பரப்பில் பிடிபடும் மீன்வகைகள், மீன் கருவாடு ஆகியவற்றின் சுவையின் நிமித்தம் தென்பகுதி மக்கள தேடிவாங்கி உண்ணும் உணவாக அவை அமைந்திருப்பதையும் இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தமானதெனக் கருதுகிறேன்.

மன்னார் கடற்பரப்பின் கூடுதலான பங்கு கடற்தாவரங்கள், சல்லியைக் கொண்டிருப்பதனால் இங்கு உற்பத்திக்கு உகந்த வளம் நிறைந்த இடமாக இம்மாவட்டம் காணப்படுகிறது. இதுமாத்திரமல்லாமல் இப்பகுதியில் காணப்படும் கண்ணா(Mangrow) மரங்கள் மீன் இனவிருத்திக்கான சூழலை உருவாக்குகின்றன. இப்பகுதித் தீவுக்கூட்டங்களும் மீனினப் பெருக்கத்திற்கு வழி சமைக்கின்றன.

இந்து சமுத்திரமும், வங்காள விரிகுடாவும் கலக்கும் இடமாக மன்னார் மாவட்டம் அமைந்திருப்பதும் மீனினவிருத்திக்கான காரணியாய் இது அமைகிறது.

முத்துச்சிற்பி, கடலட்டை, சங்கு, கடற்றாமரை, அலங்கார மீன்கள், சிங்கி போன்ற விலையுயர்ந்த வருமானம் தரும் பொருளாதாரத்துக்கு ஆதாரமாயிருப்பதும், ஏற்றுமதி மூலம் வெளிநாட்டு வருமானத்தை அள்ளித்தருவதுமான கடற் திரவியங்கள், மன்னார் மாவட்டத்தில் மிகுந்து காணப்படுகின்றன. முத்தரிப்புத்துறை, முத்துச்சிலாபம் என்ற கிராமங்கள் முத்துச்சிற்பிக்கும் மன்னார் மாவட்டம் பிரசித்தமானதென்பதை எடுத்துக்காட்டுகின்றன.

மீன் வளம் மிகுந்த மாவட்டமாக மன்னார் மாவட்டம் திகழ்ந்த காரணத்தினாலேயே மீனைப் பதப்படுத்தி தகரத்தில் அடைக்கும் தொழிற்சாலை இலங்கையில் முதன் முதலாக மன்னார் பேசாலைக் கிராமத்தில் அரசினால் நிர்மாணிக்கப்பட்டது. மீன் உணவு(Fish Meal) தொழிற்சாலை, ஐஸ் தொழிற்சாலை ஆகியனவும் இக்கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டன.

கடல், கடல்சார்ந்த பல தரப்பட்ட ஆய்வுகளை நடத்துவதற்கு, மன்னார் மாவட்டம் மிகவும் சிறந்த இடமென்பதைக் கவனத்திற்கெடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மீன்பிடி வளாகத்தை இங்கு அமைப்பதற்கு பொருத்தமான இடமென்பதையிட்டுத் தாங்கள் பரிசீலனைக்கு எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன் - என்று அதில் உள்ளது.(எ)

**நாவற்குழி வீடமைப்புத் திட்டத்திலுள்ள**

# 265 வீடுகளைப் பெற 760 பேர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,மே18

நாவற்குழியில் உள்ள வீடமைப்புத்திட்டத்தில் குடியமர்வதற்கென 760பேர் விண்ணப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள 265 வீடுகளை தனியாருக்கு விற்பனை செய்வதற்கென விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. கிடைத்துள்ள விண்ணப்பங்களை பரிசிலனை செய்து முன்னுரிமை அடிப்படையில் வீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள தெரிவித்தன.

அந்தப் பகுதியில் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளை முதலில் மேற்கொள்ளவும் -

அதன் பின் குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தவும் - நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்- அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

விரைவாக இந்தப் பணிகளை பூர்த்தி செய்து வீடுகளை கையளிக்க வீடமைப்பு அதிகாரசபையும் யாழ்.செயலகமும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளதாகவும்- தெரிவிக்கப்பட்டது. (எ-3)

**நாளை**

வைகாசி 05
திங்கட்கிழமை
19.05.2003
திதி : சதுர்த்தி
பின்னிரவு: 1.44வரை
நட்சத்திரம் : மூலம்
முற்பகல் : 9.43வரை
சுபநேரம் : 11.52 - 1.22
ராகுகாலம் : 7.22 - 8.52
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

தன்னை அதிகமாய் அறிந்தவனே தன்னைக் குறைவாய் மதிக்கிறான்.

# புலிகளின் பிரசன்னம் இன்றியே டோக்கியோ மாநாட்டை நடத்துக!

### மங்கள சமரவீர கூறுகிறார்

கொழும்பு,மே18

விடுதலைப் புலிகளின் பிரசன்னம் இன்றியே டோக்கியோ மாநாடு நடத்தப்படவேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவிதுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

டோக்கியோவில் நடைபெறவுள்ள உதவிவழங்கும் மாநாட்டை பிற்போடுவது இலங்கை மக்களை ஏமாற்றுகின்ற நடவடிக்கையாகவே அமையும். எனவே, இலங்கையின் நலனைக் கருத்தில் கொண்டு இம் மாநாட்டைப் பிற்போடக்கூடாது. விடுதலைப் புலிகள ஆயுதங்களை வைத்திருப்பதால், அவர்களை இந்த மாநாட்டுக்கு சர்வதேச நாடுகள் அழைத்திருக்கக் கூடாது.

- இவ்வாறு மங்கள சமரவீர தெரிவித்தார். (ஐ-4)

# இதோ!

*சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!*

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 - 222 - 2567

(குறிப்பு:- சத்திரச் சந்திக்கு அண்மை) (சி-27486)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்
04
04
1908



அம்பாள் அடியில்
20
04
2003

திருமதி


## மாணிக்கம் கணபதிப்பிள்ளை

எமது குடும்பத் தலைவி அவர்களின் பிரிவுத்துயிரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் தொலைபேசி அழைப்புகள், தந்திகள், கடிதங்கள் மூலம் எமது துயரில் பகிர்ந்துகொண்ட அன்பு நெஞ்சங்களுக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி நாளைமறுநாள் (20.05.2003) செவ்வாய்க்கிழமை நயினாதீவு சித்தாமிர்த புட்கரணித் தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு எமது இல்லத்திலும் நடைபெறுகின்றன. அன்னையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*7ஆம் வட்டாரம்*
*நயினாதீவு.*
(18016)
- குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சின்னத்தம்பி முருகேசு கந்தையா

தோற்றம் 25-04-1931
மறைவு 19-04-2003

அன்பின் பிறப்பிடமாகத் திகழ்ந்த ஐயாவே!
பண்பின் சிகரமாக வாழ்ந்த உங்களை
எங்களால் மறக்க முடியவில்லையே!
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (18.05.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதைத் தொடர்ந்து நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச்சடங்கின் போது வருகைதந்து பல வழிகளிலும் எமக்கு உதவிகள் வழங்கிய அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இல.220, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(18069)
- குடும்பத்தினர்.

# சாவகச்சேரி சந்தையில் பப்பாளிப்பழம் தாராளம்

தென்மராட்சி,மே18

சாவகச்சேரி சந்தைக்கு பப்பாளிப் பழம் பெருமளவில் விற்பனைக்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பகுதியில் ஷெல் வீழ்ந்து கைவிடப்பட்ட இடங்களில் பப்பாமரம் வளர்ந்து பயன்தரு மரங்களாகிக் காட்சி தருவது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு இன பப்பாளிப்பழங்கள் சந்தைக்கு வருவதை காணமுடிகிறது. (எ-117)

# பற்றரி 'அசிட' பறந்து இளைஞன் கண்ணில் காயம்!

யாழ்ப்பாணம்,மே18

பற்றரி மூடியைத் திறந்தபோது அதிலிருந்து 'அசிட்' தெறித்து கண்ணில் பட்டதாகத் தெரிவித்து, இளைஞன் ஒருவன் இடது கண் பாதிப்புக்குள்ளான நிலையில் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சிறாம்பியடிப் பகுதியில் உள்ள கராஜ் ஒன்றில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அங்கு பணி புரிபவரான, மூளாயைச் சேர்ந்த திருநாவுக்கரசு சற்குணராசா (வயது - 18) என்பவரே கண்ணில் காயமடைந்தவராவார். (எ-15)

# விவசாயக் குழுக்கூட்ட திகதியில் மாற்றம்

வலி.தெற்கு,மே18

எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெற இருந்த வலிகாமம் தெற்கு பிரதேச விவசாயக் குழுக்கூட்டம் 21ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும் என வலிகாமம் தெற்கு உதவிப் பிரதேச செயலர் த.தேவராஜன் அறிவித்துள்ளார்.

பிரதேச செயலகத்தைச் சேர்ந்த விவசாய சம்மேளனங்களின் உறுப்பினர்களை அன்றைய தினம் காலை 10மணிக்கு பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்துக்கு வருகைதருமாறும் அவர் கேட்டுள்ளார். (எ-152)


# இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ். வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வு காணலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!

**மணிசாமி**

*யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி. (பழைய லிங்கம் கூல்பார் அருகில்)*
*இல. 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).*
பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
14
12
1925



உதிர்வு
19
04
2003

அமரர்

## பொன்னம்பலம் தேவராஜா

எமது குடும்பத் தலைவனின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நணபர்கள் மற்றும் தொலைபேசி, தந்தி மூலமும் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நேரில் வருகை தந்தும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்து நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (18.05.2003) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பொற்பதி ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
(18025)
- குடும்பத்தினர்.


# இந்தியாவில் கல்வி பயிலுங்கள்

பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட கார்டன் சிட்டி கல்லூரி

உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி மாத்திரம் போதுமானது.

**2003 ஆண்டு அனுமதி**

| பாடநெறி | | காலம் |
|---|---|---|
| B.Sc. Compuer Science | B.Sc.(Comp) | 3 வருடம் |
| Bacherlor of Computer Application | B.C.A. | 3 வருடம் |
| B. Com Computers | B.Com.(Comp) | 3 வருடம் |
| Bacherlor of Business Management | B.B.M. | 3 வருடம் |
| Bacherlor of Hotel Management | B.H.M. | 4 வருடம் |
| B.A. Journalism | B.A.(Jour) | 3 வருடம் |
| B.Sc. Fashion & Apparel Design | B.Sc.(F.A.D) | 3 வருடம் |
| B.Sc. Microbiology | B.Sc.(Micro) | 3 வருடம் |
| B.Sc. Genetics | B.Sc.(Gen) | 3 வருடம் |
| B.Sc. Biotechnology | B.Sc.(Biotech) | 3 வருடம் |
| Bacherlor of Physiotherapy | B.P.T. | 4 வருடம் |
| Master of Business Administration | M.B.A. | 2 வருடம் |
| Master of Turism Administration | M.T.A. | 2 வருடம் |
| Master of Social Work | M.S.W. | 2 வருடம் |
| Master of Computer Application | M.C.A. | 3 வருடம் |
| M.Sc. Microbiology | M.Sc.(Micro) | 2 வருடம் |
| Master of Physiotherapy | M.P.T. | 2 வருடம் |
| M.Sc. Biochemistry | M.Sc.(Biochem) | 2 வருடம் |
| M.Sc. Bio-Technology | M.Sc.(Biotech) | 2 வருடம் |

நேர்முகத்தேர்வு 25, 26, 27 ஆம் திகதிகளில்
உங்கள் பதிவுகளை முன்கூட்டியே பதிவு செய்யவும்.

**திருமதி நளினி சிவகுமாரன்**
*19, ஹம்டன் லேன், வெள்ளவத்தை, கொழும்பு - 06.*
தொலைபேசி: 365360, 503138, 0777-383846.

## பனஞ்சிராய்குள் மர்மப் பொருள்: மாணவி காயம்!

அடுப்புக்குள் எரிந்துகொண்டிருந்த பனஞ்சிராய்குள் இருந்து சீறிப் பாய்ந்த மர்மப் பொருள் உணவருந்த காத்திருந்த மாணவியின் கன்னத்தைப் பதம்பார்த்தது. கடந்த செவ்வாய்க்கிழமை மட்டுவில் வடக்கு முத்துமாரியம்மன் கோவிலடிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மகேந்திரராசா ரஜிகா (வயது10) என்பவரே காயமடைந்தவராவார். ஷெல் வீச்சினால் சேதமடைந்த பனஞ்சிராய்த்துண்டை எரித்தபோதே மர்மப் பொருள் சீறிப் பாய்ந்தததாத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 - 11 - 1934



மறைவு 28 - 05 - 2002

### திருமதி பூமணி சிவசுப்ரமணியம்

(இளைப்பாறிய C.T.O. இணைப்பாளர், கொழும்பு)

அன்பின் அர்த்தத்தை அகிலமதில் அறியவைத்து
அன்பினால் எமையெல்லாம் வழி நடத்தினீர்கள்
வாழ்க்கைப் புத்தகத்தில் புரட்டும் பக்கங்கள்
வளமாக இருக்குமாறு வாழ வழி சமைத்தீர்கள்!

பாசத்தின் சுமையோடு பறந்து சென்று ஓராண்டானாலும்
இரு விழி சிந்திய நீர்த்துளி இன்னும் காயவில்லை!
பண்பட்ட மனமெல்லாம்நின் பிரிவால் புண்பட்ட வேளை
இம்மேதினியில் இன்பமளிக்க நின் இன்முகம் காட்டிடம்மா!

10/2, புகையிரத வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (18047)

பாச நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

## 'பாண்ட்' வாத்தியக் கருவிகள் அன்பளிப்பு

காரைநகர்,மே18

காரைநகர் பாடசாலைகளுக்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் 'பாண்ட்' வாத்தியக் கருவிகளை வழங்கியுள்ளார்.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம், சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலம், யாழ்ற்றரன் கல்லூரி ஆகியவற்றுக்கே இவ்வாறு 'பாண்ட்' வாத்தியக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. (எ-73)

## புத்தூர் சிவன் விளையாட்டுக்கழகம் வருடாந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள்

இடம் :- புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி மைதானம்
காலம் :- 18.05.2003 ஞாயிற்றுக்கிழமை மாலை 2மணி
தலைவர் :- செல்வன் சா.சாந்தகுமார்
பிரதம விருந்தினர் :- திரு.சி.இளம்பரிதி (யாழ்.மாவட்ட அரசியலதுறைப் பொறுப்பாளர்)
சிறப்பு விருந்தினர்கள்:- திரு.வ.ஆறுமுகம்
(அதிபர், யா/ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்)
திரு.கா.சுதாகரன்
(விளையாட்டு உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்)

☆ வெற்றிக் கேடயத்துக்கான இறுதிப்போட்டி நடைபெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர். (18055) - சிவன் விளையாட்டுக்கழகம்.

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் வைகாசித் திங்கள் 4ஆம் நாள் இன்று (18.05.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.20 மணிமுதல் 12.26மணிவரையுள்ள கேட்டை நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுபவேளையில்,

யாழ்ப்பாணம்
திரு.திருமதி பரமசாமி
தம்பதிகளின் புத்திரன்
திருநிறை செல்வன்
**பரமேஸ்வரன்**
அவர்களுக்கும்



சுழிபுரம்
திரு.திருமதி சிவஞானம்
தம்பதிகளின் புத்திரி
திருநிறை செல்வி
**தர்சினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம் சுவிற்ஸர்லாந்து(Switzerland)இல் திருமணம் நடைபெறவுள்ளது. திருமண வைபவத்தை முன்னிட்டு இல.38, யாழ்.றோட், யாழ்ப்பாணம், திருமதி பரமசாமி இல்லத்தில் விருந்துபசாரம் நடைபெற உள்ளது. அத்தருணம் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 38, யாழ். றோட்,
யாழ்ப்பாணம். (18080)


தங்கள் நல்வரவை நாடும்:
திருமதி நாகம்மா பரமசாமி


# புரோட்டினெக்ஸ்

நாள்தோறும் இழக்கும் சக்தியை மீட்டுத்தருகிறது

**100% தாவரப் புரதம்**

விட்டமின்களும் கனியுப்புக்களும் அடங்கியது
கொலஸ்ரோல் அற்றது






## மொடேன் கல்வி நிலையம்

நெல்லியடி, பருத்தித்துறை

SPOKEN ENGLISH WITH GARMMAR

By:- NISHANTHAN
(Dip. in English)

புதிய பிரிவு ஆரம்பம்
திங்கள் (19.05.2003)
நெல்லியடி: 3.30 (பு.நே.)
பருத்தித்துறை: 4.30 (பு.நே.)

(18059)


## மணமகன் தேவை

1965ஆம் ஆண்டு பிறந்த உத்தராட நட்சத்திரத்தினை உடைய, யாழ். கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, ஓரளவு அங்கவீனமுடைய, அழகிய மணமகளுக்கு பெற்றோர் ஓரளவு படித்த மணமகனை எதிர் பார்க்கின்றனர். தகுந்த சீதனம் வழங்கப்படும்.

தொடர்பு:-
விள.இல.1890,
(17983) C/o உதயன்.


Direct Start 2003

A/L பரீட்சை எழுதிய மாணவர்க்கான
விசேட பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன

Computer Education for Success

Diploma in MS OFFICE — 4 months
Diploma in WEB DESIGN — 3 months
Diploma in DESKTOP PUBLISHING — 3 months
Diploma in COMPUTER PROGRAMMING — 4 months
Diploma in INFORMATION TECHNOLOGY — 5 months
Diploma in COMPUTER STUDIES — 4 months



இலவச பாடநூல்கள்

எமது அனைத்து பாடநெறிகளும் ICM U.K,
London Academy of Computing Electronics
உயர்கல்வி நிலையங்களால் அங்கீகரிக்கப்பட்டவை

இலவச கல்வி ஆலோசனைகளுக்கும்
மேலதிக விபரங்களுக்கும் ↓

ASIAN COMPUTER SYSTEMS
2 G, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
Tel : 021-222-5677

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Sony, National T.V. 14", 19", 20", 21", 25" வரையான T.V.க்கள், டெக், றேடியோ என்பன சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்டு மலிவான விலையில் விற்பனைக்குண்டு. (ஒறியினல் ஜப்பான்) தொடர்பு 150, K.K.S. Road, Jaffna. (17936)

Scooty ஸ்கூட்டர், மெலோடிக்கா விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 122, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (18094)

பாவித்த Sony, 20"-21" T.V.க்கள் 2197-24,000/-, 2185-19,000/-, 2032-11,500/-, G21Q2 - 22,000/- சிங்கப்பூரில் பாவிக்கப்பட்டு மீண்டும் கறுப்புப் பெயின்ற் அடிக்கப்படாதவை. தொடர்பு: R.மகேஸ்வரன், K.K.S. வீதி (சிறுவர் பூங்கா முன்பாக), மல்லாகம். (18091)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து உங்களுக்குத தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக் கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(17945)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (17960)

## வீடு விற்பனைக்கு

அச்சுவேலி, சென்.ஜோசப் வீதி, பத்தமேனியில் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.சுரேந்திரராஜ், C/o சச்சிதானந்தம், காளிகோயிலடி, பத்தமேனி. 18-05-2003 ஏழு மணியிலிருந்து 11மணி வரை சந்திக்கலாம். (18020)

## காணி விற்பனைக்கு

யா/மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்துக்கு அருகில் கிணற்றுடன் 7 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அம்பிகைபாகன் கமலாம்பிகை, அல்லாரை தெற்கு, மீசாலை. (சி-27965)

## மணமகன் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, 1972இல் பிறந்த, பூராட நட்சத்திரம் கிரகபாவம் 36 உடைய, தொழில்பார்க்கும், பட்டதாரி மணமகளுக்கு யாழ்ப்பாணத்தில் தொழில் பார்க்கும் அதே தரத்தில் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1893, C/o உதயன், யாழ்ப்பாணம். (18058)

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, 1975 தை பிறந்த, திருவோண நட்சத்திரம், 4ஆம் பாதம் 7இல் செவ்வாய் கிரகபாவம் 74, உயரம் 5' 6", கலைப்பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகன தேவை. ஆசிரியர், அரச உத்தியோகத்தர் முழுவிவரங்களுடனும் சாதகக்குறிப்புடனும் விண்ணப்பிக்கவும். தொடர்பு: விளம்பர இலக்கம் 1895, C/o உதயன், யாழ்ப்பாணம். (18097)

1966ஆம் ஆண்டு, திருவாதிரை நட்சத்திரம், இலக்கணத்தில் செவ்வாய்க்குற்றமுள்ள மணமகளுக்கு உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை. சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: செ.சிவபாதம், "கௌரிவாச[illegible]" ஏரைக்கால் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில். (18062)

## மணமகள் தேவை

U.Kயில் P.R.உடன் வேலை செய்யும், யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, புனர்பூச நட்சத்திரம், செவ்வாய்த்தோஷமற்ற (27 வயது) மணமகனுக்கு படித்த, சிவந்த நிறமுடைய மணமகள் தேவை. குறிப்பு, படத்துடன் விண்ணப்பிக்கவும். (சீதனம் அவ்வளவாகக் கவனிக்கப்படமாட்டா) பொருத்தமற்றவை திருப்பி அனுப்பி வைக்கப்படும். "அம்மன்", 176/14, ஜம்பெட்டா வீதி, கொழும்பு-13. (17940)

## தேவை

நாவலர் வீதியில், மனோகராச் சந்திக்கும் இலுப்பையடிச் சந்திக்கும் இடையில் 1அல்லது 11/2 பரப்புக் காணி வீடு கட்டுவதற்கு உடன்தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (18084)

## தொடர்புகொள்ளவும்

கொழும்பில் இருந்து வவுனியா வருகையில் தவறிவிட்ட கைத்தொலைபேசியை கண்டெடுத்து யாழ். வந்த நபருக்கு, உரிமையாளரும் யாழ். வந்துள்ளமையால் அவர் 021 222 3822, 071 303975 இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (18087)

## தவறிவிட்டது

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த சந்திரமோகினி பூரணசகாயம் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.538402192V) யாழ். காரைநகர் பஸ்ஸினுள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இ.பூரணசகாயம், ஜெயவசந்தம் O.L.R.Chruch Road, உயரப்புலம் ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். (18088)

## தென்மராட்சி[illegible] 3 பாடசாலை[illegible]கள் ஜி.ரி.இசற்றின[illegible] புனரமைப்பு

தென்மராட்சி,மே18

தென்மராட்[illegible] பகுதியில் யுத்தத்தினால் சேதமடைந்த சில பாடசாலைகள் ஜி.ரி.இசற் நிறுவனத்தினரால் புனரமைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி சக்தியம்மன் தமிழ் வித்தியாலயம், சாவகச்சேரி றோமன கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இரு வகுப்பறை கட்டடங்கள் என்பனவே இவ்வாறு புனரமைக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகள் புனரமைக்கப்பட்ட போதிலும் மாணவர் தொகைக்கேற்ப தளபாட வசதிகள் இல்லாதிருப்பதாக மேற்படி பாடசாலைகளின் சமூகத்தினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## திருப்புகழ்மண்டபம் மீசாலையில் திறப்பு

தென்மராட்சி,மே18

*மீசாலை சித்திரவேலாயுதர் ஆல*யத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திருப்புகழ் மண்டபம் கடந்த வியாழக்கிழமை வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் திருப்புகழ் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது. (எ-117)


**FORUT** அலுவலகம் இடம்மாற்றம்

அத்தியடி, பருத்தித்துறையில் இயங்கி வந்த எமது போரூட் யாழ். கிழக்கு திட்ட அலுவலகம் 19.05.2003 (திங்கட்கிழமை) இலிருந்து **விக்னேஸ்வரா வீதி, கேணியடி, கரவெட்டி** (நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு எதிரே உள்ள வீதியில்) எனும் முகவரிக்கு இடம்மாற்றம் செய்யப்படவுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

திட்ட இணைப்பாளர்,
போரூட், யாழ்.கிழக்கு.

(18086)



**விற்பனையாளர்கள் தேவை**

த.குமாரசாமி அன் சன்ஸ் கண்ணாடிக்கடைக்கு விற்பனையாளர்கள் தேவை. (ஆண்கள் மட்டும்)

*த.குமாரசாமி அன் சன்ஸ்*
248/1, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (18017)


'விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளது' (வேதம்)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபானு வருடம் வைகாசித் திங்கள் 5ஆம் நாள் (19-05-2003) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில்

மணமகன்
திருவளர் செல்வன்
**திருச்செல்வம்**
(உரிமையாளர் - திரு ஸ்ருடியோ)
அவர்களுக்கும்



மணமகள்
திருவளர் செல்வி
**மேரி ரஞ்சி**
அவர்களுக்கும்

திருமணம் செய்ய தேவ திருவருளால் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு **பருத்தித்துறை, அசெம்பிளி ஒவ் கோட் தேவசபை** (C.T.B. முன்பாக )யில் இல்லறவாழ்வில் இணையும் மெய் விவாகத் திருச்சடங்கிலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் புதுமணமக்களை ஆசிர்வதித்து வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்.

**திரு.திருமதி வ.சண்முகலிங்கம்**
திரு ஸ்ருடியோ
"சந்திரபவனம"
3ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.

**திரு.திருமதி க.இருதயநாதன்**
செம்பியன்பற்று வடக்கு,
செம்பியன்பற்று.

(இருவீட்டார் அழைப்பு)

(18068)


**The Barbara Mulvaney**
Computer Training Centre
123, Temple Road, Jaffna

A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் நன்மை கருதி கணனி பயிற்சி நெறிக்கான அனுமதித்திகதி இம் மாதம் 31ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

[illegible] Dissertation [illegible]

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்

T.P.No - 222 5971


## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

1. மேற்படி கோயிலின் பெயரால் தனிப்பட்டவர்களும் சில நிறுவனங்களும் நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளதாக அறியவந்துள்ளது. வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் நிர்வாகத்தினால் எவருக்கும் இக்கோயில் சார்பில் நிதி சேகரிக்க அதிகாரம் வழங்கப்படவில்லை என்பதனைப் பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.
2. பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க ஞாயிற்றுக்கிழமைகளில் மாலைப் பூசைநேரங்கள் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளன.
   1. அவல் பூசை பி.ப. 3 மணி
   2. சாயங்காலப் பூசை பி.ப. 4 மணி
   3. அர்த்தசாமப் பூசை பி.ப. 6 மணி

ஏனைய பூசை நேரங்கள் வழமைபோல் நடைபெறும் என்பதினை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
துன்னாலை வடக்கு,
புலோலி.

தலைவர்,
அறங்காவலர் சபை

(C/27963)

## ஈராண்டு நினைவு தினம்

பிறப்பு 1978 - 02 - 23



இறப்பு 2001 - 05 - 17

### பரமேஸ்வரன் சர்மினி (சுசி)

அன்பு காட்டி ஆசையூட்டி
பண்பொடு வாழ்ந்தாய் மகளே!
இறைவனடி சேர்ந்து ஈராண்டு ஆனாலும்
மனதை விட்டு மாறாதம்மா உன்நினைவு.

நீங்காத நினைவு மடல்
அன்புத் தங்கைகள், தம்பி,
அப்பா, அம்மா மற்றும்
நண்பர்கள், உறவினர்கள்.

தகவல்:
*குணரத்தினம் (ப.அ.சபை),*
*சரசாலை வடக்கு,*
*சாவகச்சேரி.* (18090)

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 03 - 02 - 1944



விண்ணுலகில் 14 - 06 - 1995

### அமரர் வ.சிவஞானம் (C.T.B.)

(நிலாஒளி பொலிகண்டி)

திதி: 18-05-2003

எட்டு ஆண்டுகள் ஆனாலும் எங்கள்
நீங்காத நினைவாக, உம் பிரிவால்
வாடுகின்றோம். இல்லத்து விளக்காக
இருந்தெம்மைக் காத்தவரே!
நினைவழியா எட்டாம் ஆண்டில்
நெஞ்சம் நெகிழ்ந்து உம்மை
அஞ்சலி செய்கின்றோம்.

'நிலாஒளி',
பொலிகண்டி.

- குடும்பத்தினர்.

(18095)




# எவருக்கும் நாங்கள் சுமையில்லை

தேசிய சேமிப்பு வங்கி 60 வயதுக்கு மேற்பட்ட முத்த பிரஜைகளின் நிலையான வைப்புகளுக்கு 1.5% மேலதிக வருடாந்த வட்டியை மாதாந்தம் வழங்குகின்றது.

மேலதிக தகவல்களுக்கு அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கி கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்

தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதம் 9.7% வருடாந்த விளைவு வட்டி 10.1%

## ரூபா.100,000/- வைப்புச் செய்து பெறக்கூடிய பயன்கள்

- தொகுதி வைத்திய காப்புறுதி பெறும் தகைமை.
- வருடாந்த பரிசிழுப்பில் வெற்றி பெறும் 10 பேருக்கு திருத்தலங்களை தரிசிக்க, அல்லது ஒவ்வொருவருக்கும் ரூபா. 50,000/- பெறுமதியான பணப்பரிசுகள்.
- வட்டி வீதம் குறைந்த கடன்கள்.
- 12 மாத தவணைகளில் குறைந்த வட்டியில் வழங்கப்படும் ரூபா 3000/- இற்கு குறையாத பண்டிகை கால முற்பணங்கள்.

NSB
உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

PHOENIX O&M 0772

# துயர் பகிர்கின்றோம்

யாழ். அரசாங்க மரக்கூட்டுத்தாபன பிரதேசமுகாமையாளர்
திரு. கந்தையா விஜயரட்ணம அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி கந்தையா இலட்சுமி

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவர்களின் துயரில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*யாழ்.அரசாங்க மரக்கூட்டுத்தாபன ஊழியர்கள்.*

(18122)

# கண்ணீர் அஞ்சலி



யா/அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய அதிபர்

## குமாரசாமி கணேசமூர்த்தி

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் பாடசாலைச் சமூகத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
அதிபர்கள், ஆசிரியர்கள்.
*நெடுந்தீவுக் கோட்டம்.* (18120)

# கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய

## குமாரசாமி கணேசமூர்த்தி

*(அதிபர், யா/அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம்)*

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வலயக்கல்விப் பணிப்பாளரும்,
அலுவலர்களும், ஊழியர்களும்,
தீவகம்.
(18112)

# துயர் பகிர்வு

யா/அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய அதிபர்

## குமாரசாமி கணேசமூர்த்தி



அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரை நாமும் பகிர்ந்து கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அதிபர்கள்
தீவக வலயம்
(சி18111)

# கண்ணீர் அஞ்சலி

யா/அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய அதிபர்



## குமாரசாமி கணேசமூர்த்தி

அவர்களின் அகாலமரணத்தையொட்டி துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு, அவரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்:
ஊர்காவற்றுறை
கல்விக் கோட்டக் கல்வி அதிகாரி,
அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(சி27972)

## மரவேலைப் பயிற்சிக்கு விண்ணப்பம்

சண்டிலிப்பாய்,மே18

மனித வள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் மரவேலைப் பயிற்சி நெறியில் பங்குபற்றி பயிற்சி பெறுவதற்கு 16 வயதுக்கு மேற்பட்ட துறை சார்ந்த இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நான்கு மாதங்கள் நடைபெறுமெனவும் - மாதமொன்றுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றும் -

இதுவரை பயிற்சிக்கு விண்ணப்பித்தோர் தொகை மிகவும் குறைவாக இருப்பதாகவும் - சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலாளர் ச.செல்வராஜா தெரிவித்தார்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் பிரதேச செயலகத்துக்கு விண்ணப்பத்தை அனுப்பிவைக்கலாம் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-135)

## யாழ்.ஆஸ்பத்திரியில் சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம்,மே.18

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த செவ்வாய், புதன் ஆகிய இரு தினங்களும் அடுத்தடுத்து இரு சைக்கிள்கள் திருட்டு போய் உள்ளன.

யாழ்.போதன வைத்தியசாலையில் சிற்றூழியர்களாக கடமையாற்றும் இரு ஊழியர்களின் சைக்கிளே இவ்வாறு திருட்டு போயுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த திருட்டுச் சம்பவங்கள் பற்றி வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தருக்கும் பொலீஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

(எ-15-139)

## பிரான்பற்று ஆலயத்தில் நேற்று மிருகபலி!

சண்டிலிப்பாய்,மே18

பிரான்பற்று கிராமத்தில் உள்ள புளியடி அம்மன் ஆலயத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற வருடாந்த வேள்வி உற்சவத்தின் போது நூற்றுக்கும் அதிகமான ஆட்டுக்கடாக்கள் பலியிடப்பட்டன.

கோழிகளும் பெருமளவில் பலியிடப்பட்டன. சில ஆட்டுக்கடாக்கள் அலங்கரிக்கப்பட்ட உழவு இயந்திரங்களில் ஊர்வலமாக ஆலயத்துக்கு கொண்டு வரப்பட்டன.

பலியிடுதலை பார்ப்பதற்கும், பலியிடப்பட்ட ஆட்டுக்கடாக்களை விலை கொடுத்து வாங்கிச் செல்வதற்கும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் அயல் கிராமங்களிலிருந்தும் அங்கு வந்திருந்ததைக் காணமுடிந்தது.

(எ-135)

## தவறிவிட்டது

வெள்ளிக்கிழமை முகமாலைச் சோதனைச் சாவடியில் ஆலய நேர்த்திக்குரிய நற்கருணைப் பாத்திரம் மற்றும் பூசைப் பாத்திரங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் S.K.ஜேசுதாசன், ஒக்ஸ்போட் றேடர்ஸ், ஆனைக்கோட்டைச் சந்தி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

T.P.: - 222 - 2862
(18107)

# இலவச கணனி கற்கை நெறி

## Dip in Ms Office

*வடமராட்சி கிழக்கு, குடத்தனையில்*

மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பிப்போர் வடமராட்சி கிழக்கினைச் சொந்த இடமாகக் கொண்டவராகவும் க.பொ.த. (சாதாரண தரம்) / க.பொ.த. (உயர்தரம்) ஆகிய பரீட்சைகளில் சித்தியடைந்தோராகவும் இருத்தல் வேண்டும். இதற்கான விண்ணப்பப் படிவங்களை சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்க அலுவலகத்திலோ அல்லது குடத்தனை தென்னிந்திய திருச்சபை வதிவிடத்திலோ பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்திய விண்ணப்பங்கள் யாவும் மேற்படி இடங்களில் 31.05.2003அம் திகதிக்கு முன்பாக ஒப்படைத்தல் வேண்டும்.

வளம் பேணல் சங்கம்
வடமராட்சி கிழக்கு.
(சி27974)


# யாழ்.மக்களின் நலன் கருதி

**EXPO AVIATION**

**LION AIR**

**SERENDIB EXPRESS**

ஆகிய மூன்று விமானங்களுக்குமான

யாழ். – கொழும்பு | கொழும்பு – யாழ்.

விமான ரிக்கெற்றுக்களை
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள.....

# ஹெப்பி இம்பெக்ஸ்

புதிய உயர் கல்லூரி
95, பருத்தித்துறை வீதி, *(ஆரிய குளம் முன்பாக)*
யாழ்ப்பாணம். 021 - 222 6144
24 மணி நேர சேவைக்கு 077 - 6038505


# மரண அறிவித்தல்கள்

## தம்பையா கந்தையா

(2ஆம் வட்டாரம் புங்குடுதீவு)

புங்குடுதீவு; 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் வடக்கு, கோகுல வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தம்பையா கந்தையா நேற்று (17.05.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் லட்சுமியின் அன்புக் கணவரும் நயினைநாதன், நாகேஸ்வரி, கணேசமூர்த்தி, கேதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அருளையா, காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் கிருஷ்ணபிள்ளை, யோகம்மா, பராசக்தி, சற்குணம், பரிமளம், கனகு, சண்முகவல்லி, புஸ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (18.05.2003) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொட்டக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*கோகுல வீதி,*
*கோண்டாவில் வடக்கு.*

*தகவல்:-*
க.நயினைநாதன்
(நாதன்)
(18116)

## பிரான்சிஸ் பயஸ்

புதுவீதி,கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட பிரான்சிஸ் பயஸ் அவர்கள் நேற்று (17-05-2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் - சிசிலியா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சோமு - றோசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கத்தரீன்(கனகமணி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராஜரெட்ணம், ஞானம்மா ஜேம்ஸ்சின்ராஜா, சந்தியாப்பிள்ளை, மதியாபரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் வேதநாயகம், மரியநாயகம், துரைநாயகம் (தர்சன் பேக்கரி உரிமையாளர்), செல்வநாயகம் (ஜேர்மனி), ஜெயராஜா(பிரான்ஸ்), ஜெயராணி, காலஞ்சென்ற சிறில் ஆகியோரின் அன்புத் தந்தையும் விமலராணி, சந்திரா, ஜொய்சி, பவானி (ஜேர்மனி), விமல், செல்வரெட்ணம் (பெரியண்ணை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புதுவீதியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (18.05.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.26, புதுவீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:-*
பிள்ளைகள்,
மருமக்கள்.
(18109)

## அரியரட்ணம் ஹேமச்சந்திரா

(மொழி பெயர்ப்பாளர், புனர்வாழ்வுக்கழகம், தெல்லிப்பழை)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அரியரட்ணம் ஹேமச்சந்திரா 16.05.2003 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியரட்ணம் மற்றும் மகிழ்மலர் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் தில்லைமுத்து தம்பதிகளின் பாசமிகு மருமகனும் மயூரரஞ்சனியின் (ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும் கிருஷ்ணச்சந்திரா, பிரகாஷ் (மாணவர்கள் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் லோகதாரணி, கனகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*5ஆம் ஒழுங்கை,*
*உடுவில், சுன்னாகம்.*

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.
(18118)

# நெஞ்சு விட்டகலாத நினைவலைகள்

ஐந்தாம் ஆண்டு | ஏழாம் ஆண்டு



*23.10.1930 ← உதயம் → 05.05.1940*

*12.06.1998 ← அஸ்தமனம் → 09.05.1996*



அமரர்
தம்பிஐயா பாலகிருஷ்ணன்

திருமதி
யோகேஸ்வரி பாலகிருஷ்ணன்

அன்போடு பேசி ஆதரவாய் அரவணைத்து எம்முடன்
பண்போடு வாழ்ந்த அன்புத் தெய்வங்களே! - உங்களது
பசுமையான நினைவுகள் எம்மைவிட்டு ஒருபோதும் அகலாது!
நீங்காது நிலைத்தே இருக்கும்!
ஓம் சாந்தி

*88, நல்லூர் குறுக்கு வீதி,*
*யாழ்ப்பாணம்.*

- குடும்பத்தினர்.
(18108)



'குமுதினிப் படுகொலை'யின் 18 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் கடந்த வியாழனன்று நெடுந்தீவில் இடம்பெற்ற சமயம் எடுக்கப்பட்ட படங்கள் இவை. குமுதினிப் படகில் படுகொலை செய்யப்பட்ட செல்வி நிர்மலாதேவி, மாவீரர் கப்டன் வேந்தன் ஆகியோரின் தந்தையான க.பசுபதி நெடுந்தீவுக் கடலில் நினைவுச் சுடரினை ஏற்றி வைப்பதை முதலாவது படத்திலும்-

நெடுந்தீவு மாவலித்துறையில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியில் உயிரிழந்தவர்களின் படங்கள் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருப்பதை இரண்டாவது படத்திலும்-நினைவு தினப் பேரணியில் கலந்து கொண்ட மாணவர்களை மூன்றாவது படத்திலும் -

படுகொலை செய்யப்பட்டோரின் ஞாபகார்த்தமான மரக்கன்றுகள் நடுகை செய்யப்படுவதை நான்காவது படத்திலும் காணலாம். (எ)

## ஆலயத்தில் சிரமதானம்

சாவகச்சேரி,மே18

போர் நடவடிக்கைகளால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள கல்வயல் - விளைவேலி மருதடிப் பிள்ளையார் ஆலயச் சூழல் இன்று காலை 9மணி தொடக்கம் சிரமதானம் மூலம் சுத்தம் செய்யப்படவுள்ளது. இச்சிரமதானத்தை தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படவுள்ளது.


IBM Branded கணனிகள்

PERSONAL COMPUTER
Intel Pentium 4 1.8GHz/2.4GHz
NOTEBOOK / LAPTOP
Intel Pentium 4 2.4GHz
Intel Celeron 1.1GHz
வருட உத்தரவாதம்
100 % ...
கணனிகள் திருத்திக் கொடுக்கப்படும்.

MICRO PC SYSTEMS
15, 35th Lane, Col-6 074-516764
32, New Chetty St, Col-13. 074-613617
175/3, ... 021-222 5893


# சிங்களப் பாடசாலைகளில் தமிழ் மொழிப் போட்டிகள்

கொழும்பு,மே18

நாட்டிலுள்ள அனைத்து சிங்கள மொழிமூல அரச பாடசாலைகளில் தமிழ் மொழி தினம் தொடர்பான போட்டிகளை நடத்துவதற்கு மனிதவள அபிவிருத்தி, கல்வி மற்றும் கலாசார விவகார அமைச்சு நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிங்கள மாணவர்களிடையே தமிழ் மொழி கற்பதை ஊக்குவிக்கும் நோகத்துடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக பிக்கிரிய, குளியாப்பிட்டிய மற்றும் பத்துகஸ்நுவர ஆகிய தேர்தல் தொகுதிகளிலுள்ள அரச சிங்களப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களிடையே தமிழ்மொழி தொடர்பான போட்டிகளை நடத்த குளியாப்பிட்டிய வலயக் கல்விப் பணிப்பாளர் சி.தஸநாயக்க ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

சிங்களப் பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்கள் பல இந்த இனங்களுக்கு இடையிலான சமாதான முன்னோடி நடவடிக்கைகளை பெரிதும் பாராட்டி வரவேற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)


கிறிஸ்டோரல்

நெல்லியடி
கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம்
(18.05.2003)
இரசாயனவியல்:- சர்மிலன்
இ.கணிதம் - சிவாகரன்
Note:- 2005 A/L
அளவையியல்- ...
(C27975)


# 'சார்ஸ்' குறித்த விளம்பரங்கள் ஆஸ்பத்திரியில் மும்மொழிகளில்!

யாழ். போதனா வைத்திய சாலையில் அண்மையில் இடம்பெற்ற 'சார்ஸ்' நோய் தொடர்பான பரபரப்பினை அடுத்து இந்நோய் பற்றிய அறிவுறுத்தலுடன் கூடிய எச்சரிக்கை விளம்பரங்கள் வைத்தியசாலையின் முக்கிய பகுதிகளில் மும்மொழிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன.

சுகாதார போசனை, நலன்புரி அமைச்சினால் நேற்று அனுப்பி வைக்கப்பட்ட இவ்விளம்பரத்தில் 'கொரனாஸ்' என்ற வைரஸ் சுவாசம் மூலம் உடலினுள் செல்வதினால் ஏற்படும் இந்த தீவிர சுவாச நோய், கடுங்காய்ச்சல், வரண்ட இருமல், குளிர் நடுக்கம், உடல் ... தல், மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகளுடன் காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-15-72)

# மாதகல் மீனவர் தாக்கப்பட்ட சம்பவம்: கடற்படை அதிகாரியை விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,மே18

மாதகல் கடற்பரப்பில் தொழிலில ஈடுபட்டிருந்த மீனவர்கள் இருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைக்காக எதிர்வரும் 21 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின யாழ். அலுவலகத்திற்கு வருமாறு அப்பகுதி கடற்படை அதிகாரிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான கடிதம் ஆணைக்குழுவினால் கடற்படை அதிகாரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கடந்த 11 ஆம் திகதி இரு மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளையில் கடற்படையினரால் தாக்கப்பட்டதாக ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே. (ம-10)

# கேள்வி அறிவித்தல்

வீடமைப்பு, பெருந்தோட்ட, உட்கட்டமைப்பு அமைச்சு

## கட்டடத் திணைக்களம்

1. யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு அவசரகால ... ஜெனரேட்டர் வழங்கி, நிறுவி, பராமரிப்பதற்கான பொறியிடப்பட்ட கேள்விகளை கட்டடத் திணைக்கள கேள்விச்சபைத் தலைவர் 2003.06.05ஆந் திகதி மு.ப. 10.00 மணி வரை கோருகின்றார்.
2. கேள்வி ஆவணங்களை பந்தி 8 இல் குறிப்பிடப்பட்ட பிரதம பொறியியலாளர் அலுவலகங்களிலிருந்து 2003.05.30 ஆந் திகதி பி.ப.3.30 மணிவரை மீளளிக்கப்படாத ரூ. 1000/= மட்டும்செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
3. கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக பத்தரமுல்ல, செத்சிரிபாய, இரண்டாம் மாடி கட்டடங்கள் திணைக்கள ஒப்பந்தக் கிளையில் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விதாரர் அல்லது அவர்களுடைய அங்கீகாரம் பெற்ற முகவர்கள் சமுகமளிக்கலாம்.
4. டீசல் ஜெனரேட்டர்களை வழங்கி, பொருத்துவதற்கான செல்லுபடியாகும் வியாபாரப் பதிவுச் சான்றிதழ் கொண்ட மற்றும் டீசல் ஜெனரேட்டர்களை வழங்கி, நிறுவுவதற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவராக இலங்கையில் 10 வருடங்களுக்கு மேல் தொழிற்படும் முகவர்களுக்கு மட்டுமே கேள்விப்படிவங்கள் விநியோகிக்கப்படும் கேள்வி ஆவணங்கள் பெறுமுன் இதற்கான ஆவணச் சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.
5. பொறியிடப்பட்ட கேள்விகள் பத்தரமுல்ல, கோட்டே, ஸ்ரீ ஜயவர்த்தனபுர 'செத்சிரிபாய', கட்டடங்கள் திணைக்களம் கேள்விச் சபைத் தலைவரிடம் நேரடியாக ஒப்படைக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப முடியும்.
6. தாமதப் பிணைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதாகையால் பாதுகாப்புச் சோதனை நிமித்தம் கேள்வி மூடப்படும் நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்னரே செத்சிரிபாய வளவுக்குள் பிரவேசிக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.
7. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், கடற்கரை வீதி கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அல்லது கொழும்பு -7, டொரிங்டன் அவனியூ, இல. 213, கட்டடங்கள் திணைக்களம்,பிரதம பொறியியலாளர் (கொழும்பு நிர்மாணம்) அவர்களிடம் பெறலாம்.
8. கேள்வி ஆவணங்கள் பெறக்கூடிய பிரதம பொறியியலாளர் விலாசங்கள் பின்வருமாறு

1. பிரதம பொறியியலாளர், (யாழ்ப்பாணம்) கட்டடத் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
2. பிரதம பொறியியலாளர், (கொழும்பு நிர்மாணம்) கட்டடத் திணைக்களம், 213, டொரிங்டன் அவனியூ, கொழும்பு -7.

**A.D. விக்கிரமசிங்ஹ,**
பணிப்பாளர்,கட்டடத் திணைக்களம்,
'செத்சிரிபாய', ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே,
பத்தரமுல்ல.
(C/27973)


COLOMBO THEOLOGICAL SEMINARY

Dip - in - Th. கற்கை நெறிக்கான Introduction to Bible Doctrine (வேதாகம உபதேசத்திற்கான அறிமுகம்) எனும் பாடம் கற்பிக்கப்படவுள்ளது. விரும்பிய அனைவரும் கலந்துகொள்ளவும்.

காலம் :- 19.05.2003 - 23.05.2003 வரை
நேரம் :- காலை 9 மணி - 2 மணிவரை
இடம் :- அசெம்பிளி ஒவ் கோட், இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.

189, Dutugemunu St, Kohuwela.
(18124)


## தவறிவிட்டது

புதுத்தோட்டம் நெல்லியடி கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த சத்தியநாதன் செல்வயோகம் என்பவருடைய பை (BAG), தேசிய அடையாள அட்டை, உறுப்புரிமை அட்டைகள், 1/2 பவுண் சங்கிலி, 2000/= ரூபா பணம், மருந்துப் பொருள்கள் என்பவற்றுடன் 16.05.2003 வெள்ளிக்கிழமை யாழ்.பஸ் நிலையத்தில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவும் சன்மானம் வழங்கப்படும்.

சத்தியநாதன்,
செல்வயோகம்
புதுத்தோட்டம்,
நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி.
070-212874 (18121)


A/L முடித்த மாணவர்களுக்கான இலவச கணனி வகுப்புக்கள்

கணனித் தொழில்நுட்பத்தில் முன்னிலை வகிக்கும் எமது நிறுவனம் யாழ் நகரிலும் தென்மராட்சியிலும் A/L முடித்த மாணவர்களுக்கு ஒரு வாரகால இலவச கணனி வகுப்பினை அறிமுகப்படுத்துகின்றது. எனவே மாணவர்கள் 27-05-03க்கு முன் தங்களிற்கு அருகிலுள்ள எமது நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.

மேலதிக விபரங்களிற்கு
Director
STP Your Partner in IT Solutions
Branch Sankathanai Chavakachcheri
... Road, Kandarmadam, Jaffna



நாகம்ஸ் சுன்னாகம்

சரத்குமார், சிம்ரன், கிரண், ரோஜா நடிக்க
அரசு
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பி.நே.)





ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
குதூகல ஆரம்பம்
இளையதளபதி விஜய், மீராஜஸ்மின்
புதிய கீதை
10.30, 2.30, 6.30, 9.30
(C27626)





லிபேட்டி அச்சுவேலி

விஜயகாந்த், சிம்ரன், விவேக் நடித்த
ரமணா
காட்சி நேரம் :
11.00, 3.00, 7.00 (புதிய நேரம்)





நிறைஞ்சனாஸ்

அவள் வருவாளா?
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பி.நே.)
CANNIBAL

லஷ்சுமி சினிமா (இணுவில்)

மாதவன் ஸ்நேகா நடித்த
என்னவளே
19 முதல் தில்லானா மோகனாம்பாள்
(சிவாஜி - பத்மினி)
தினசரி: 11.00, 3.00, 7.00 (பி.நே.)



தொலைபேசி இயக்குநர் தேவை

தொலைத் தொடர்பு நிலையத்தில் கடமையாற்றக்கூடிய ஆண் ஒருவர் தேவை.
உடன் தொடர்புகொள்ளவும்.

S.P.Enterprises
379,Kasthuriyar Road, Jaffna.
Tel: 021-222 5735 - 6 (C/27978)


# கண்ணீர்க் காணிக்கை

புதுவீதி, கொய்யாத்தோட்டம் தர்சன் பேக்கரி உரிமையாளர் திரு.துரைநாயகம் அண்ணா அவர்களின் அன்புத் தந்தையார்

## பிரான்சிஸ் பயஸ் (பயஸ் ஐயா)

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு ஆறாத்துயர் அடைந்துள்ளதுடன், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் உறவுகளின் துயரிலும் நாம் பங்கேற்று, அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நிவேதினி வெதுப்பகம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*
**கா.பாஸ்கரன்**
லக்ஸ்மி பேக்கரி
ஆறுகால்மடம்.
(18127)

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை நவரத்தினம்

பத்தாவத்தை, இளவாலையைச் சேர்ந்த செல்லத்துரை நவரத்தினம் நேற்று (17.05.2003) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் திரேசா சவுந்தரேஸ்வரியின் அன்புக் கணவரும் மரியராணி (ஆசிரியர், இளவாலை கன்னியர் மட வித்தியாலயம்), அன்ரன் ஜெயராஜா (தெல்லிப்பழை ப.நோ.கூ.ச), ஜெயராணி (நுண்கலைப்பீடம் மருதனார்மடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லத்துரை பத்திநாதர் (உபதலைவர், தெல்லிப்பழை ப.நோ.கூ.ச) அவர்களின் அன்புச் சகோதரரும் மேரி ராயேஸ்வரியின் மைத்துனரும் பத்மதேவமலரின் சிறியதந்தையும் மரியராசனின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (19.05.2003) திங்கட்கிழமை பிற்பகல் 2மணி அளவில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக இளவாலை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.பத்திநாதர் (சகோதரன்),
அன்ரன் ஜெயராஜ் (மகன்).
*பத்தாவத்தை, இளவாலை.*
(C/27979)

# புலிகளின் அதிருப்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நோர்வே குழு கடந்த வியாழனன்று கிளிநொச்சிக்கு சென்று தலைவர் பிரபாகரன் தலைமையிலான புலிகளின் உயர் மட்டக் குழுவோடு விரிவாகப் பேச்சு நடத்தியிருந்தது.

அப்போது முக்கிய சில விடயங்களைத் தலைவர் பிரபா நோர்வே தரப்புக்கு எடுத்து விளக்கியிருந்தார்.

"வடக்கு - கிழக்கு மக்களின் அவசர புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்வதற்காக - அரசும் புலிகளும் சமனான பிரதிநிதித்துவத்தைக் கொண்ட - சிரான் உப குழு அமைக்கப்பட்டது. ஆனால், அதற்கு நிதி, நிர்வாக அதிகாரமோ சட்ட அந்தஸ்தோ வழங்கப்படவில்லை. உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் எமது மக்களின் புனர்வாழ்வுப் பணிக்கென சர்வதேச சமூகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நிதி உதவியை இந்த அமைப்பின் மூலமே நாம் செலவிட வேண்டும். ஆனால் சிரான் அமைப்பிற்கோ நிதி, நிர்வாக அதிகாரங்கள் இன்னமும் வழங்கப்படவில்லை; சட்ட அங்கீகாரமும் இல்லை. இதனால் திரட்டப்படும் நிதியை இந்த அமைப்பு ஊடாக எமது மக்களுக்குச் செலவிட முடியாது. எனவே, எங்களது மக்களுக்கு செலவிட முடியாத நிதியை, எமது மக்களுக்கென்ற பெயரில் சர்வதேச சமூகத்திடமிருந்து திரட்டுவதற்கு நாம் எப்படி ஒத்துப் போக முடியும்? அது தவறு அல்லவா? எனவே, மக்களுக்குரிய புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்களை நாங்களே முன்னெடுக்கக் கூடியதான அதிகாரங்களுடைய கட்டமைப்பு ஒன்று உறுதி செய்யப்படும் வரை சமாதான பேச்சுக்களிலோ, ஜப்பான் மாநாட்டிலோ நாம் பங்குபற்றுவது சாத்தியமற்றது. - இப்படி தலைவர் பிரபாகரன் திட்டவட்டமாகத் தெரியப்படுத்தியிருந்தார்.

புலிகளின் இந்தத் திடமான நிலைப்பாட்டை நோர்வேக் குழு வியாழன் இரவே அரசுத் தரப்புக்கு தெரியப்படுத்தியது.

அன்றிரவிரவாகவும் அடுத்த நாள் வெள்ளிக்கிழமையும் அரச உயர் மட்டம் இந்த விவகாரம் குறித்து விரிவாக ஆராய்ந்தது. புதிய திட்டம் ஒன்று அரசுத் தரப்பினால் தயாரிக்கப்பட்டது.

அந்தத் திட்டத்தோடு அடுத்த நாள் - அதாவது நேற்றுக் காலை 10.45 மணியளவில் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சரும் சமாதான நடைமுறைகளுக்கான அனுசரணைக் குழுவின் தலைவருமான விடர் ஹெலஸ்கிஸன், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ரீசர், தூதரக இரண்டாவது செயலாளர் தோமஸ் ஹக்லண்ட் ஆகியோர் ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சி சென்று, அங்கு புலிகளின் பிரதிநிதிகள் குழுவை அவர்கள் சந்தித்தனர்.

புலிகளின் சமாதானச் செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் பங்கு பற்றினர். இச்சந்திப்பு இருமணிநேரம் நீடித்தது.

சிரான் உப குழுவுக்கு நிதி, நிர்வாக அதிகாரங்களை சட்ட ரீதியாக வழங்கும் சட்டவரைபு ஒன்றின் நகலும் - அந்த சட்ட வரைபுப்படி ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் சிரானுக்கு சட்ட அங்கீகாரம் அளிக்கப்படும் என்பதை - அந்தக்கால எல்லையையும் குறிப்பிட்டு - பிரதமர் உறுதியளிக்கின்றார் எனத் தெரிவிக்கும் பிரதமரின் உறுதிக் கடிதத்தின் நகலும் - நேற்று விடுதலைப் புலிகளுக்கு ஒப்படைக்கப்பட்டன எனத் தெரிகின்றது.

இந்த வரைபு ஆவணங்களில் ஏதேனும் திருத்தம் தேவைப்படுகின்றது என்று புலிகள் கருதினால் அதனை செய்வது குறித்துப் பரிசீலிக்க அரசுத் தரப்புத் தயாராக இருப்பதாகவும் புலிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டதாக அறியவந்தது.

இவ்விடயம் குறித்துத் தலைவர் பிரபாகரனுடனும், மதியுரைஞர் பாலசிங்கத்துடனும் கலந்துரையாடிய பின்னரே முடிவெடுக்க முடியும் எனப் புலிகளின் பிரதிநிதிகள் நோர்வேக் குழுவினரிடம் நேற்றுக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மதியுரைஞர் பாலசிங்கம் லண்டனில் இல்லை. அவர் வேறு ஓர் ஐரோப்பிய நாட்டில் ஓய்வில் இருக்கின்றார். எனவே இவ்விவகாரம் குறித்து ஆலோசனை நடத்தி முடிவு எடுக்க ஓரிரு நாள்கள் தேவைப்படும் என்று புலிகள தரப்பில் கூறப்பட்டதாகவும் தெரிகின்றது.

நோர்வேக் குழுவினருடன் நேற்று இடம்பெற்ற பேச்சை அடுத்து உடனடியாகவே தமிழ்ச்செல்வன், தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசினார் எனவும் - நோர்வேத் தரப்பினர் தெரியப்படுத்திய தகவல்களை அவர் தலைவருக்கு எடுத்துரைத்தார் எனவும் - அறியவந்தது.

விடுதலைப் புலிகளின் பதில் கிடைத்ததும் நோர்வேக் குழு நாளை அல்லது நாளை மறுதினம் வன்னிக்கு மீண்டும் வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## முகாம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூடி இந்தப் போராட்டம் குறித்து முடிவு செய்தனர்.

இக்கலந்துரையாடலில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் கலந்துகொண்டார்.

மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டும் வகையில் ஒரு மணி நேரம் மறியல் போராட்டம் நடத்தவிருக்கின்ற னர்.

மல்லாகம் நீதிமன்றப் பகுதியிலும் மறியல் போராட்டம் நடந்த மக்கள் முயற்சி மேற்கொண்டுள்ளனர். (ம-3-86)

## ஜப்பான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொற கொட ஆகியோரை நோர்வே குழுவினர் நேற்றிரவு சந்திக்க முயற்சி மேற்கொண்டனர்.

எனினும், அவர்கள் வேறு ஒரு வைபவத்தில் கலந்துகொண்டதால் சந்திப்பு இடம்பெறவில்லை. அதனால் இன்று அந்தச் சந்திப்பு இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடிய விடயங்கள் குறித்து இன்றைய சந்திப்பில் நோர்வே குழு எடுத்து விளக்கும். (ம-3)

# தற்போதைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குக்குத் தீர்வுகாண்பது குறித்து ஆராயப்பட்டபோதும் முடிவுகள் ஏதும் எட்டப்படவில்லை.

தற்போதைய நெருக்கடி நிலைக்கு தீர்வுகாண்பது தொடர்பாக அரசு முன்வைத்துள்ள யோசனைகளை விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்தேன். அந்த யோசனைகள் குறித்து தெளிவாகவும் - ஆழமாகவும் - இப்போது கூறவிரும்பவில்லை. ஆனால், அந்த வழிமுறையைத் தேடும் விவகாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை மட்டும் என்னால் கூறமுடியும்.

வடக்கு - கிழக்கின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக்கு அடித்தளம் இடுவதில் சர்வதேச சமூகம் முன்னுரிமை வழங்கவிருக்கின்றது. இதற்காக தற்சமயமுள்ள கூட்டமைப்புக்களை துரிதமாக சீராக்கவேண்டும். அதில் எதுவித குழப்பமும் ஏற்பட இடமளிக்கக் கூடாது - என்றார் அவர்.

# இந்து கலாசார......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செல்லும் நிலை ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து அமைச்சரும் அவருடன்சென்ற ரெலிகொம் நிறுவனத்தின் வடக்கு - கிழக்கு முகாமையாளர் எஸ். கனகசூரியர் மற்றும் குழுவினரும் அங்கிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் விரைந்தனர்.

வழியில் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில், அப்பகுதி மக்கள் தம்மைத் தாக்கவந்ததாக சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துவிட்டு சென்றுள்ளனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

சித்தன்கேணியில் உள்ள ரெலிகொம் நிறுவனத்தின் கட்டடம் அமைந்துள்ள இடத்தைப் பார்வையிட அமைச்சர் மற்றும் ரெலிகொம் அதிகாரி அடங்கிய குழு ஒன்று சென்றுள்ளது.

ரெலிகொம் கட்டடம் அமைந்துள்ள காணியின் ஒரு பகுதியில் ஏற்கனவே அப்பகுதிப் பாடசாலை ஒன்றின் ஒருபகுதி இயங்கிவருகிறது. ரெலிகொம் நிறுவனம் மீண்டும் அங்கு இயங்க ஆரம்பித்தால் அந்தப் பாடசாலை அங்கிருந்து வெளியேறவேண்டியிருக்கும். இதுகுறித்தே அப்பகுதி மக்களுக்கும் அமைச்சர் குழுவுக்கும் இடையில் கருத்துமோதல்கள் ஏற்பட்டன. ஒரு கட்டத்தில் இரு தரப்பினருக்கும் இடையிலான வாக்குவாதம் முற்றி கைகலப்பு ஏற்படும்நிலை வரை சென்றதாகக் கூறப்படுகிறது.

நிலைமை மோசமானதைத் தொடர்ந்து, அங்கிருந்து புறப்பட்டு விரைந்தனர். பின்னர் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் இதுகுறித்து முறைப்பாடு செய்துள்ளனர்.

அவர்களது முறைப்பாட்டை ஏற்ற பொலீஸார், சம்பவ இடத்துக்கு உடன் விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-3)

## இரத்தினபுரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மட்டம் உயரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இரத்தினபுரி பொலீஸ் நிலையம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இரண்டாயிரம் வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

சுமார் 25 ஆயிரம் குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளன. மீட்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. சிறுசிறு படகுகளின்மூலம் வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்கள் மீட்கப்பட்டு வருகின்றனர்.

வெள்ளம், மண்சரிவு காரணமாக இரத்தினபுரி, பதுளைப் பகுதி வீதிகள் ஊடாக போக்குவரத்துக்கள் யாவும் ஸ்தம்பித்துள்ளன.

மீட்புப் பணிக்கு பொலீஸாரும் கடற்படையினரும் இராணுவத்தினரும் அழைக்கப்பட்டுள்ளனர்.


இரத்தினபுரி, மாத்தறை, காலி மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்யும் என்று வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

தற்போதைய நிலை நீடித்தால் மக்கள் பெரிதளவில் பாதிக்கப்படுவர் என்று அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

குகன் ஸ்ரோர்ஸ்
எரிபொருள் விற்பனை நிலையம்
யாழ்ப்பாணம், பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தியில்
அமைந்துள்ள எமது நிறுவனத்தில்
காலை 5.00 மணி முதல் இரவு 9.00மணி வரை டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய், ஒயில் வகைகளைக் கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நினைவு மலர் கவருக்கான
அழகிய பிள்ளையார்
படத்திற்கு தொடர்பு
கொள்ளவும் :-
பிள்ளையார் அச்சகம்,
நல்லூர்.

மணமகள் தேவை
(விரிவுரையாளர், விஞ்ஞானப்பட்டதாரி மற்றும் Professional தரத்தில்)
1972, கார்த்திகை 1இல் செவ்வாய் கிரக பாவம் 52, BENG, M.Sc (Advanced Manufacturing Systems) - University of London, University Kingston, work, (MANAGEMENT CONSULTANT) Delarue PLO (Lanka) Security & Currency Printers Joint Venture Central Bank, Salary SLR (எண்பதினாயிரம்) 80,000/= இற்கு மேல் பெறும் உயர் உத்தியோக மணமகனுக்கு அழகான மணப்பெண் மேற்கூறிய தரத்தில் தேவை.
தொடர்பு :- (18049)
பொ.பாலச்சந்திரன்
(இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்)
202, மானிப்பாய்வீதி, ஓட்டுமடம்,யாழ்ப்பாணம்.
தரகுப் பணம் எதுவுமில்லை. சந்திக்கும் நேரம் பிற்பகல் 1-5வரை


சிவமயம்
நூல் அறிமுக விழா
இளையதம்பி தயானந்தாவின்
வானலையின் வரிகள்.........
பேட்டித்தொகுப்பு I
இடம் :- நல்லை ஆதீன கலாமண்டபம், யாழ்ப்பாணம்.
காலம் :- இன்று (18.05.2003) ஞாயிறு மாலை 4.30
விழா சிறப்புற வாழ்த்துவோர்:
சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பெரியகடை, யாழ்ப்பாணம். (C27977)


OXFORD ENGLISH ACADEMY
புதிய பிரிவு ஆரம்பம் - 21.05.2003
BY.MR.B.JOTHY
நவீன கருவிகளின் உதவியுடன்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
பருத்தித்துறையில் - பி.ப. 4.மணி (பழைய நேரம்)
P.K. Lane, பஸ் நிலையம் அருகில்.
நெல்லியடியில் - பி.ப. 3.15 மணி (ப.நே.)
Maths Centre இல் அனுமதியைப் பெறுக!
(18074)

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
A/L 2005
இணைந்த கணிதம்
திரிகோணகணிதம்
வேக நேர வளையி
ஆசிரியர்:
திரு.பிரதீபன்
ஆரம்பம்: 18.05.2003
ஞாயிறு 4.00 p.m.

வீடு/காணி தேவை
யாழ்.நகரில் அல்லது யாழ் - பலாலி வீதியினை அண்டிய பகுதியில் திருநெல்வேலிக்கு இடையில் வீடு அல்லது வெற்றுக் காணி விலைக்குத் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
T.P.:- 026 - 20835
0776 - 033575
(17999)

A/L 2005
கணக்கீடு
S. தவா B.com.(Hons)
ஆரம்பம்: 19.05.2003
7.30 a.m
திகழ் கல்வி நிறுவனம் இணுவில்.

SUBRA - சித்தன்கேணி
ENGLISH
With
Grammar
By:
BRITTO
புதிய பிரிவு
செவ்வாய், வியாழன்
காலை 7.00
பேச்சு சிங்களம்
லீலா கிருஷ்ணன்
செவ்வாய், வியாழன் 8.00 - 9.00
(C/27966)

யாழ். நகரில் இன்று மங்களகரமான திறப்பு விழா

சண்ஜெய பூட்லண்ட்
SHANJAEYA FOODLAND
சுபவேளை: நண்பகல் 12 மணி
சகலவிதமான சைவ, அசைவ உணவுகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
Specially Jaffna Traditional Recipies
Catering Facilities for all occasions and Take away.
414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
414, Hospital Road, Jaffna.
(18089)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

|  |  |  |  |
|---|---|---|---|
|  | வெ. புதன் | சூ. ▲ சனி ராகு |  |
|  | இராசிச் சக்கரம் |  | வியா. |
| செ. |  |  |  |
|  | சந். கேது |  |  |

# இந்த வார இராசி பலன்

## 18-05-2003 - 24-05-2003

### மாற்றம்

சமாதானப் பேச்சு கட்டுப்பாடுகள் உறுதியுடன் மீண்டும் தொடங்கும். உலக நாடுகளின் அழுத்தம் கடுமையானதாக இருக்கும். விடுதலைப் புலிகள் புத்திசாதுரியமாக நடந்துகொள்ளுவார்கள். தெற்கில் அரசியல்வாதிகளின் தடுமாற்றம். சமயத்தலைவர்களின் மறைமுக அழுத்தங்கள் இருக்கும். இந்தியா, அமெரிக்கா கூடிய கரிசனை கொள்ளும். இந்தியாவுக்கு பாகிஸ்தான் பச்சைக்கொடி காட்டும். மத்திய கிழக்கில் மேலும் வன்முறை பெருகும். பசுபிக், இந்துசமுத்திரப் பிராந்திய நாடுகளில் காற்றழுத்தம், மழை கொடுத்து அழிவுகள் கொடுக்கும் என கிரக நிலை காட்டுகின்றன.

### மேடம்

இக்காலத்தில் அழகிற்குத்தான் இளம்சந்ததி முதலிடம் கொடுக்கின்றது. அறிவுக்கல்லா அறிவற்ற சந்ததி உருவானால் அழகு என்ன செய்யும். அறிவும் அழகும் வேண்டும். இடமாற்றங்கள், மனதில் பயம், நண்பர்கள் வருவர், புதியஆடை, பொருள்வரவு, தொழில் மேல்அதிகாரிகளின் நட்பு, காணிப்பிரச்சினை பேசித்தீரும் அறிகுறிகள் தென்படும். உஷ்ண பீடைகள், களைப்புக் கொடுக்கும். விவசாயத்துறை, மின்சாரத்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்.*

### இடபம்

பெற்றோரின் பாசம் பிள்ளைக்குத் தெரியாது. அந்தப் பிள்ளை பெற்றோர் ஆனதும்தான் உணரமுடிகின்றது. தொழில் ஸ்தானத்தில் மூத்தோர் வார்த்தைக்கு மதிப்புக்கொடுத்து நடவுங்கள். தடுமாற்றம், தூரத்திலிருந்து உதவிகள் கிடைக்கும், இனஜனக் கொண்டாட்டங்கள், பொருள் வரவுகள், குடும்பத்தினரிடையே கருத்து வேற்றுமை, புதியதொழில் தொடங்குதல், நாரிநோ, சளித்தொல்லை என்பன கொடுக்கும். நீதித்துறை, மருந்துத்துறை போன்றதுறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்*

### மிதுனம்

வேலி பயிரை மேய்வது அந்தக்காலத்திலிருந்துதான் நடக்கின்றது. தொழிலில் புதிய எதிர்பார்ப்புக்கள் ஏற்படும். கொடுத்த பொருள் வராது. நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். சத்துருக்களுடன் போட்டி ஏற்படும். மருத்துவத்துறையினர்கள் நன்மை அடைவர். வாத உளைவு, சளித்தொல்லை, கொடுக்கும். தெற்குத்திசையில் நன்மைகள் கிடைக்கும். குருத்தொழில், தபால், தந்தித்துறை போன்றவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்*

### கடகம்

அரசியலில் மெல்ல மெல்ல வெள்ளம் பாய்ந்துதான் கல்லையும் உருட்டிப் பாயும். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் ஏற்படும். புத்திரராலோ, சகோதரங்களாலோ வேதனைவரும். ஆனால் அவர்களின் அலுவல்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள்.

நெஞ்சுவருத்தம் கொடுக்கும். பிரயாணங்கள் தடைப்படும். குருத்துறை, நகைத்துறையைச் சேர்ந்தவர்கள் அதிக நன்மைகள் அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வியாழன்.*

### சிங்கம்

தெய்வ பக்தி இங்குதான் முதலிடம். அதன் பின்பே ஏனையவை எனவே, கடவுளை கை தூக்குகின்றவர்களுக்கு என்றும் முன்னேற்றம் கிடைக்கும். தொழில் சிறப்புக் கொடுக்கும். குடும்பத்தினருடன் கருத்து வேற்றுமை, புதிய ஆடை, நகை சிலருக்கு கிடைக்கும். வீடு மனையில் மாற்றம், பிரயாணத்தடை, மனத்துன்பம், யோசனைகள் வரும். வாய்வுத் தொல்லை, கால்நோத்தம் என்பன வரும். அரசியல், குரு போன்ற துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன்.*

### கன்னி

காசு உள்ள வீட்டுப் பிள்ளைகள் படிக்காதா? செல்வம் கூடிய பிள்ளைகள் கள்ளமனம், சண்டித்தனம் காட்டும். இதனால் பெற்றோருக்கு எவ்வளவு துன்பத்தைக் கொடுக்கின்றார்கள். இளங்கன்று பயமறியாது. கொடுக்கல் வாங்கலால் தொல்லைகள். பிரயாணச்சிந்தி கொடுக்கும். தூரத்துச் செய்திகளால் மகிழ்ச்சி அடைவீர்கள். வாய்வுத்தொல்லை கொடுக்கும். செய்தித்துறை, ரீ.வி, டெக் துறை, சினிமாத்துறையினர் அதிக இலாபங்கள் அடைவர்.

*அதிரஷ்டநாள்:- வியாழன்*

### துலாம்

நீதி தேவதை மேலோங்கினால்தான் எந்த விஷயத்திலும் விடிவு, உறுதி ஏற்படும். உங்கள் தொழில்ஸ்தானத்திலும் உங்களால் பல நன்மையான மாற்றங்கள் கொடுக்கும். பொருள் வரவு உண்டு. குடும்பத்தில் நன்மைகள் ஏற்படும். நண்பர்கள் நன்மைகள் செய்வார்கள். சலவருத்தம், தோல் வருத்தம் பாதிப்பு ஏற்படும். வைத்தியம் செய்யவும். அட்டமத்துச்சனி நீங்கும் பொழுது வேதனை தர இடமுண்டு. பிரயாணங்களைத் தவிர்க்கவும். சட்டத்துறை, குருத்துறையினர் நன்மைகள் அடைவர்.

*அதிர்ஷ்டநாள்:- வியாழன்*

### விருச்சிகம்

கோபத்தால் - சண்டையால் எத்தனை அழிவு இவ்வுலகில் நிகழுகின்றது. எனவே, தொழில் ஸ்தானத்தில் பொறுமையாக இருங்கள். பொறுமை நன்மையைத் தரும். சகோதரங்களோ பிரச்சினைகள் வரும். அட ...[illegible] மாமன் வழியினர்கள் உதவிகள் செய்து தருவார்கள். தூரதேசத்தில் இருந்து செய்திகள் வரும். பொருள் வரவு சுமாராக இருக்கும். நெஞ்சுச் சளி, நோ, மலசல சிக்கல்கள் வரலாம். வியாபாரிகள், இரும்புத் தொழில் ரீவி. டெக் துறையினர் நன்மைகள் அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்:- வியாழன்*

### தனுசு

வாழ்க்கையில் எத்தனை கற்பனை. இ...[illegible]யாவுடன் நட்புப் பேணுவோம் என பாகிஸ்தான் பிரதமர் கூறுவது காரணம் இல்லாமல் இல்லை. நீங்களும் தொழில்ஸ்தானத்தில் சமாதானத்தை நிலைநாட்ட முனைவீர்கள். தூர தேசசெய்திகள் மன ஆறுதலைக் கொடுக்கும். பொருள் வரவு உண்டு. புதிய திட்டங்கள் நன்மை தரும். இடம் மாற்றம் நன்மை தரும். வாய்வுத் தொல்லை, உஷ்ணவருத்தங்கள் வரும். குருத்துறை. ரீவி டெக்துறை, வியாபாரத்துறை நன்மைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- [illegible]கள், வியாழன்.*

### மகரம்

கொண்டாட்டங்கள் அடிக்கடி வருவதால் மனிதர்களுக்கு ஏற்படும் களைப்பு ஓரளவு சாந்தியாகும். சார்ஸ் நோயும் தீவிரமாகின்றது. வெளிநாடுகளில் இருந்து வரும் அந்நியர்களினாலும் எம்மவர்களாலும் நோய்கள் பரவலாம். எனவே அவர்களுடன் பழகுவதில் கவனம் தேவை. தொழில் நிலையில் மாற்றங்கள் கொடுக்கும். புதிய பொருள் வரவு குடும்பத்தினரிடையே கருத்து வேற்றுமை என்[illegible] நாரி நோ, முதுகு உளைவு என்பனவும் கொடுக்கும் [illegible] துறை, கடல்துறை, அரசியல்துறை நன்மைகள் அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வியாழன்*

### கும்பம்

உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள் எதிலும் கண்டிப்பானவர்கள். அதிக சிந்தனை உங்களைக் காப்பாற்றும். தொழில்ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும். புதியவர்கள் வருகை பொருள் வரவு, இனஜனக் கொண்டாட்டங்கள் என்பன கொடுக்கும். தெய்வ வழிபாட்டுப் பிரயாணங்கள் சிலருக்கு நன்மை தரும். கால் பிடிப்பு, நோ, சலவருத்தம் என்பன கொடுக்கும். செய்தித்துறை, குருத்துறை, அரசியல்துறையினர் நன்மைகள் அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், வியாழன்.*

## மகாதேவா ஜோதிடம்

### மீனம்

வியாபார எண்ணங்கள் இலாபங்களைக் கொடுக்கும். இடம்மாற்றங்கள் அடிக்கடி வரும் காலமாகும். தொழில் ஸ்தானத்தில் பல மாற்றங்கள் கொடுக்கும். பொருள் வரவு கொடுக்கும். தூரத்துச் செய்திகள் நன்மைகள் தரும். குடும்பத்தில் மாற்றங்கள் கொடுக்கும். பொருள் செலவுகள் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கல், காணி, பூமி வாங்குதலில் கவனம் தேவையாகும். கால் நோ, சலவருத்தம், வாய்வுத் தொல்லைகள் கொடுக்கும். கடல் தொழில், மருந்துத் துறை, வியாபாரத்துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன்.*

★

---

இடம்பெயர்வு காரணமாக

# கடமைக்குத் திரும்பாத ஆசிரியர்களுக்கு மீள் நியமனம் வழங்க ஏற்பாடு செய்யுங்கள்!

## கல்வி அமைச்சின் செயலாளரிடம் அதிபர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே18

இடம்பெயர்வு காரணமாக கடமைக்குச் சமுகமளிக்கமுடியாத அதிபர், ஆசிரியர்களுக்கு மீள்நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

- இவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரை நேரில் சந்தித்துக் கோரிக்கை விடுத்துள்ளது வடமாகாண அதிபர்கள் சங்கம்.

கடந்த புதனன்று கடமை நிமித்தம் யாழ்ப்பாணம் வருகை தந்த மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கத்தை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் சந்தித்து இந்தக் கோரிக்கை அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டதாக சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

★ பாடசாலைகளில் கடந்த காலங்களில் ஏற்பட்ட இழப்புக்களைச் சீர்செய்ய குறிப்பிட்ட காலத்தில் நடவடிக்கை எடுத்தல்.

★ நிவாரண காவலாளி, சுகாதாரத் தொழிலாளி ஆகியவற்றுக்கான வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படல் வேண்டும்.

★ பதவியுயர்வு பெற்ற அதிபர்களுக்கு அவர்களின் தரத்திற்கேற்ற வகையில் பாடசாலைகளை வழங்கு தற்குரிய செயற்பாடுகளை மேற்கொளல்.

★ ஆசிரிய ஆளணிகளைச் சகல பாடசாலைகளுக்கும் சமமாகப் பங்கீடு செய்தல்.

★ அதிபர் வினைத்திறன் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

★ அதிபர், ஆசியர்களுக்கு கணனிக் கல்வியை வழங்குவதற்கான நிலையம் ஒன்றை குடாநாட்டில் அமைத்தல்.

★ மின்சாரக் கட்டணங்களுக்கான மானியத்தை அதிகரித்து வழங்கல்.

★ அதிபர், ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளை வருட ஆரம்பத்தில் நடத்த நடவடிக்கை எடுத்தல்.

★ மாகாண மட்டப் போட்டிகளுக்கான பிரயாணச் செலவுக் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுத்தல் - என்று அதில் உள்ளது.

(ஐ-10)

# வீதி ஒழுங்கை மீறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

## சுன்னாகம் பொலீஸார் அறிவிப்பு

வலிகாமம் தெற்கு,மே18

வலிகாமம் தெற்கு, வலிகாமம் வடக்கு பிரதேசங்களில் வீதி ஒழுங்கு முறைகளை மீறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என சுன்னாகம் பொலீஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொலீஸார் அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து பொலீஸார் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பிரதானமாக மாணவர்கள், தனியார் கல்விக் கூடங்களுக்கு செல்பவர்கள் மற்றும் இளம் வயதினர் போக்குவரத்து விதிமுறைகளை மீறி செயற்படுவதனால் பெரும்பாலான வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

பெரும்பாலும் இளைஞர்களும், யுவதிகளும் துவிச்சக்கர வண்டிகளில் - மோட்டார் சைக்கிள்களில் சமாந்தரமான நிலையில் கதைத்துக்கொண்டு செல்வதை அவதானிக்கமுடிகிறது.

அண்மைக்காலத்தில் இவ்வாறு வீதிகளில் சென்ற பலர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் குற்றப்பணம் செலுத்தியும் உள்ளனர்.

சமாந்தரமாக செல்லுதல், வேகமாக செல்லுதல், சமிக்ஞையின்றி திரும்புதல் போன்ற பல விதி முறைகளுக்கு முரணான செயல்களில் இவர்கள் ஈடுபடுவதனால் விபத்துக்கள் நேரிடுகின்றன.

வாகனங்களை ஓட்டிச் செல்வோர் சமிக்ஞை குறியீடுகளை கவனித்து வாகனங்களை செலுத்தவேண்டும். இரவு நேரத்தில் சைக்கிள்களில் செல்வோர் 'டைனமோ'வை பயன்படுத்த வேண்டும் அல்லது 'ரோச்லைட்' 'பாவிக்கவேண்டும் - என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர். (எ-152)

# மீட்புப் பாதையில் பயணித்து அமைதி வாழ்வைப் பெறுவோம்

ஒவ்வொருவருடைய செயற்பாடுகளை வைத்தே அதனைத் தெரிந்து கொள்ளமுடியும். இறைவனும் அவ்வாறே அவனிற்கு நியாயம் வழங்குகின்றார். எனவே, சொல், செயல், சிந்தனைகளால் உள்ளங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். நாம் கடவுளுக்குச் செய்ய வேண்டிய பணியானது தன்னைத்தே பிறரை அன்பு செய்யவேண்டிய கடமையாகும்.

ஒவ்வொரு மானிடரும் தமது கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டும். கடவுளின் விருப்பப்படி எக்காலமும் நற்பணி ஆற்றுவதே யாவரினதும் கடமையாக உள்ளது.

சினத்திற்கு கடவுள் அனுமதிப்பதில்லை. சாதாரணமாக ஒருவன் கோபப்பட்டால் கூட அவனை மன்னிப்பதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டும். சகோதர நோக்கோடு இருப்பவனை ஒருவன் வெறுத்தாலே அவன் கொலை செய்தவனுக்கு ஒப்பாவான். எனவே, சினம் என்பதை விடுத்து, வெறுப்புணர்வை மறந்து சகோதரத்துவத்தைக் கட்டி எழுப்புவதன் மூலம் சிந்தனைகளைச் சராக்கி ஆன்மீக வழியினில் இதயங்களை உதயமடையச் செய்வதன் மூலம் சிந்தனைக்கு எதிரியான சினம் தூரவிலகிவிடும்.

தமை செய்பவர்கள் இவ்வுலகினில்தான் தீமை செய்யமுடியும். இறைவனுக்கு முன்னால் மண்டியிட நேரிடும். உண்மையான கிறிஸ்தவன் தீமையை வெறுப்பது மட்டுமன்றி, தன்னையும் தீமை அணுகாதவாறு பார்த்துக்கொள்வான். நன்மை என்று தெரிந்திருந்தும் எவன் ஒருவன் அதைச் செய்யவில்லையோ அவனும் பாவமே செய்கின்றான். தீமை செய்பவர்கள்தான் பணம், பொருள் அதிகம் அபகரித்தவர்களாகவும் காணப்படுகின்றார்கள். அவர்கள் கோவிலுக்குக் கூடப் போவதில்லை என்ற ஏழைகள் ஆதங்கம் கொள்ளக் கூடும்.

### குழந்தை நற்பிரசாதம்

ஆயினும், ஏழைகள்தான் இறைபக்தி அதிகமுள்ளவர்கள் இத்தகையோரையே இறைவனும் விரும்புகின்றார். உயர் வாழ்விற்கு ஆயத்தப்படுத்துகின்றார்.

மண்ணகப் பொருள்கள் யாவுமே அழிந்துபோகக்கூடியவை. ஆனால், எவராலும் அழிக்கமுடியாத வானுலகச் செல்வங்களை ஏழைகளுக்காய் இறைவன் அருள்வார். இதுவே உண்மைச் செல்வங்களாகும். ஏழைகளாக வாழ்பவர்களே பெருமைக்குரியவர்கள். ஒருவனது உள்ளம் அவனது செல்வங்கள் மீது வைக்கப்பட்டிருக்கும். எனவே, பணப் பிசாசிடமிருந்து மனதை இறைவன்பால் திருப்புவோம். உலகச் செல்வங்களை மதிப்புடையதாய் கருதாதே. ஆன்மீகச் செல்வமே நிலையானதும் நிறைவானதுமாகும்.

யுத்தத்தின் வடுக்கள் தீருமோ? மண்ணில் உண்மையான அமைதி கிடைக்குமோ? என்றெல்லாம் நாம் ஏங்கிக் கொண்டிருக்கின்றோம். இறைவனை வேண்டிக்கொண்டிருக்கின்றோம். போரைத் தூண்டும் தீய சக்திகளால் இன்று மிஞ்சியவை அழிவுகள்தான். ஆயினும், 'வாளை எடுப்பவர்கள் வாளினாலே மடிவர்' என்று யேசுபிரான் மொழிந்திருக்கின்றார். (மத்தேயு: 26:52). எனவே, அழிவுப்பாதையில் செல்பவர்கள் அழுந்துபோவர். மீட்புப்பாதையில் பயணிப்பவர்கள் அமைதி பெறுவர்.

ஜோ.ஜெஸ்ரின்

# எங்கள் கதவுகளிலும் தட்டுகின்றதா 'சார்ஸ்'?



இன்று உலகின் மூலைமுடுக்கெங்கும் எல்லோர் வாயிலும் முணுமுணுக்கப்படும் பெயர் என்றால் இது ஒன்றுதான் என்று அடித்துக்கூறலாம். அந்தளவிற்கு உருவாகிய சில நாள்களிலேயே உலகையே அதிரவைத்துக்கொண்டிருக்கிறது. அந்த வகையில் நாமும் விதிவிலக்கல்ல. எங்கே எமது கதவுகளையும் தட்டிவிடுமோ என்ற அச்சம் உதித்து சில நாள்களாகின்றன. அந்தவகையில் எல்லோர் மனங்களிலும் எம் சந்தேகங்களையும் அச்சங்களையும் ஆராயும் முகமாக அமைகிறது இக்கட்டுரை.



SARS என்றால் என்ன?

SARS என்பது Severe Acute Respiratory syndrome என்பதின் சுருக்கமாகும். அதன் பெயருக்கேற்றவாறு அது ஒரு கடுமையான சுவாச நோய் நிலைமை. ஆசிய, வட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் இது இனம் அறியப்பட்டுள்ளது. சீனாவின் ஹனோய் நகர வைத்தியசாலை ஒன்றில் கடும்காய்ச்சல், வரட்டு இருமல், தசைநோவு, தொண்டை நோவு ஆகிய அறிகுறிகளுடன் கடந்த பெப்ரவரி மாதம் ஒருவர் அனுமதிக்கப்பட்டார். அடுத்த நாலுக நாள்களில் அவரில் மூச்சுவிடுவதில் சிரமம், குருதிச் சிறு தட்டுகளில் குறைவு (Low Platelet Count) ஆகியன அவதானிக்கப்பட்டன. அவரே முதலாவது SARS நோயாளியாகக் கருதப்படுகிறார்.

SARS நோய்க்கான அறிகுறிகள் எவை?

வழமையாக இந்நோய் கடுமையான காய்ச்சலுடன் (>100.4°F அல்லது >38.0°C) ஆரம்பிக்கும். அத்துடன் தலைவலி, குளிர், அலுப்பு, உடல் உளைவு ஆகியனவும் காணப்படலாம். 2 தொடக்கம் 7நாள்களின் பின்னர் வறட்டுஇருமல், மூக்கடைப்பு, தொடர்ச்சியான தும்மல், தசைகளிலும், மூட்டுகளிலும் கடுமையான நோவு, மூச்சுவிடுவதில் சிரமம் (ஆஸ்மா போன்று) மூச்சு விடும்போது அதிகரிக்கும் நெஞ்சு நோவு போன்றன காணப்படும்.

SARS நோய்க்கான காரணம் யாது?

SARS நோயானது முன்னெப்போதும் அறியப்படாத ஒருவகை 'குறோனா' (Corana) வைரஸினால் உருவாகுவதை ஆய்வுகள் நிரூபித்துள்ளன. ஆயினும் SARS நோய்க்காரணி பற்றிய ஆய்வுகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. குறோனா வைரஸ் என்பது வைரஸ்"க்களில் ஒரு குடும்பத்தின் பெயர். இதன் அங்கத்தவர்களை இலத்திரன் நுணுக்குக் காட்டியினூடாகப் பார்க்கும்போது பண்டைய அரசர்களின் முடி (Crown like) போன்று தோன்றும். இதனாலேயே இப்பெயர் ஏற்பட்டது. இக்குறோனா வைரஸ் மனிதர்களுக்கு ஒன்றும் புதியனவல்ல. சாதாரண தடிமனை உருவாக்குபவை இவையே. சாதாரணமாக மூன்று மணித்தியாலங்கள் வரை உடல் வெளியில் தொற்றுத் தன்மையுடன் காணப்படக்கூடியவை. புறவூதாக் கதிர்களினால் (UV rays) இவற்றின் தொற்றுத் திறன் அழிக்கப்படும். இதனால் சூரிய ஒளி இவற்றை அழித்துவிடும். இவற்றின் முக்கியமான இயல்பு என்னவெனில் இலகுவில் பிறப்புரிமை விகாரம் (Gene mutation) அடையக்கூடியவை. இவற்றின் பிறப் புரிமை அலகு RNA (Cribo Nucleic Acid) ஆகும். இதில் ஏற்படும் மாற்றங்களே விகாரம் (Mutation) எனப்படுகின்றன. இவ்வியல்பின் காரணமாகவே மனிதனுக்கு தலையிடி கொடுப்பனவாக புதிய SARS நோய்க்கான Corana virus உருவெடுத்துள்ளது.

இப்புதிய வைரஸ் வழமைக்கு மாறான நியூமோனியாவைத் (Atypical Pneumonia) தோற்றுவிக்கின்றது. வழமையான நிமோனியாவின் (Typical pneumonial) போது நுரையீரலில் ஏற்படும் தொற்றுக் காரணமாக பாதிக்கப்படும் காற்றுச்சிற்றறைகள் சுரப்புகளால் நிரப்பப்படுகின்றன. அதனால் ஒட்சிசன்($O_2$), காபனீர் ஒட்சைட்டு ($Co_2$) பரிமாற்றம் தடைப்படுகின்றது. ஆனால், வழமைக்கு மாறான நியூமோனியாவில்(Atypical Pneumonia) சிற்றறைகளைச் சூழவுள்ள இழையங்கள் (Tissues) வீங்குவதால் சிற்றறைகள் சுருங்கிப் போகின்றன. அத்துடன் அவற்றிற்கான குருதி விநியோகமும் தடைப்படுவதனால் கலங்கள் (Cells) இறக்கின்றன.காற்றுப் பரிமாற்றம் தடைப்படுகிறது.இதுவே Sars இல் அவதானிக்கப்பட்ட நோய் நிலைமையாகும்.

எவ்வாறு SARS பரவுகிறது?

SARS நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் தும்மும்போது அல்லது இருமும்போது வெளியில் விடப்படும் துணிக்கைகளை இன்னொருவர் உள்ளெடுப்பதனால் இந்நோய் பரவுகின்றது. இதனைவிட நேரடியானதொடுகை அல்லது மறைமுகத் தொடுகை (Dierct or Indirect Contact) மூலமாகவும் பரவலாம். வெளியில் விடப்படும் வைரஸ் துணிக்கைகள் பளிங்குகளாகி (Crystals) தூசு போன்று மிதந்து செல்வதாக நம்பப்படுகின்றது. எமக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய விடயம் என்னவெனில் ஏனைய குறோனா வைரஸ்கள் போலன்றி Sars நோய்க்கான வைரஸ்"வின் தொற்றுத் தன்மை (Infectivity) குறைவாகும் அதாவது, பெருமளவு வைரஸ் தொற்று(Large Dose) ஏற்பட்டாலே Sars உருவாகும். ஆனால், வீரியத்தைப் (virulence) பொறுத்தவரையில் ஏனையவற்றைவிடப் பயங்கரமானது.

SARS வைரஸின் நோயரும்பு காலம் (Incu-bation Period) அதாவது தொற்று ஏற்பட்டு முதல் அறிகுறி வெளிப்படு வதற்கான காலம் 3-10 நாள்களாகும். இதுவரை பெறப்பட்ட தகவல்களின் படி நோயரும்பு காலத்தில் SARS தொற்று ஏற்படுவதில்லை. இருமல், தும்மல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டபின்னரே பரவல் ஏற்படுகின்றது.

SARS குணப்படுத்த முடியுமா?

இதுவரையில் SARSஐக் குணப்படுத்துவதற்கு தகுந்த மருந்துகள் எவையும் அறியப்படவில்லை. நுண்ணுயிர் கொல்லிகள் (Antibiotics) எவையும் பலனளிப் பவையாக இல்லை. ஆயினும் நியுமோனியாவுக்குரிய சிகிச்சையே வழங்கப்படுகிறது. அத்துடன் வைரஸ் கொல்லிகள் (Antivirals) பயன்படுத்தப்படுகின்றன. தகுந்த மருந்தினைக் கண்டுபிடிப்பதற்கு விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர்.



★ SARS பரவுவதனை எவ்வாறு தடுக்கலாம்?

✪ தொற்றைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் Sars நோயாளியின் சுவாச நோய் அறிகுறிகள் அகன்று ஏறத்தாழ 10 நாள்களின் பின்பும் தொடரப்படவேண்டும்.

✪ SARS நோயாளி தனிமைப்படுத்தப்படுதல் வேண்டும். வேலைக்கு, பாடசாலைக்கு செல்வதையோ அல்லது பொது இடங்களுக்கு செல்வதையோ தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

✪ SARS நோயாளியின் குடும்பத்தினர் அனைவரும் அடிக்கடி கைகளை சுத்தப்படுத்த வேண்டும். சுத்தப்படுத்துவதற்கு மதுசாரம் (Alcohol) பயன்படுத்தலாம்.

✪ SARS நோயாளி தும்மும் போதோ அல்லது இரும்மும் போதோ மூக்கையும் வாயையும் ஒரு கைக்குட்டையினால் அல்லது முகமூடியினால் (Mask) மூடவேண்டும்.

✪ நோயாளி முகமூடி அணிய முடியாது இருப்பின் நெருங்கிக் கவனிப்பில் ஈடுபடுபவர்கள் முகமூடி ஒன்றை அணிதல் வேண்டும்.

✪ நோயாளியின் பராமரிப்பில் ஈடுபடுபவர்கள் கையுறைகளை (Disposable gloves) அணிதல் வேண்டும்.அவற்றை மீளப்பயன்படுத்தக் கூடாது.

✪ SARS நோயாளியுடன் உணவுத்தட்டு, துவாய், போர்வை என்பவற்றை பகிர்ந்து கொள்ளக்கூடாது. ஆனால் அவற்றை சுடுநீரும் சவர்க்காரமும் கொண்டு கழுவியபின் பயன்படுத்தலாம்.

✪ SARS நோயாளி பயன்படுத்தும் கழிப்பறை (Toilets) தாழி (Sinks) என்பன அடிக்கடி தொற்று நீக்கப்படவேண்டும். சதாரண தொற்று நீக்கிகள் போதுமானவை.

✪ SARS நோயாளியின் குடும்ப அங்கத்தவர்களிடம் SARS இதற்கான அறிகுறிகள் காணப்படாவிடத்து அவர்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டியதில்லை.

✪ SARS தொற்று காணப்படும் பிரதேசத்திற்கு அவசியமின்றி பிரயாணித்தல் தவிர்க்கப்படவேண்டும.

**க.கானமபன்**
**மருத்துவ மாணவன்**


பெயாரோஸ்

உங்கள் திருமணச் செலவில் பெரும் பகுதியை நாம் ஏற்போம்..

உங்கள் திருமணத்தை வெகு விமரிசையாக நிகழ்த்த பெயாரோஸ் விரும்புகிறது. உங்களுக்கு பிடித்த விதத்தில், பிடித்த இடத்தில் திருமணத்தை நடத்தலாம். ஆனால் இந்த வருடத்தில் நடக்க வேண்டும் என்பதே எமது ஒரே வேண்டுகோள்.

• மணப்பெண்ணின் புடவை • தங்கச் சங்கிலி • பாதணிகள்
• தோழியர் இருவரின் புடவைகள் • ஆபரணங்கள் • பாதணிகள்
• முக அலங்காரம் • தலையலங்கார ஆலோசனைகள்
• மலர் அலங்காரம் • மணமேடை அலங்காரம்
• மேசை அலங்காரம் • திருமண கேக்
• திருமண ஸ்ரக்சர் கேக் • திருமண அழைப்பிதழ்/கேக் பெட்டிகள்
• புகைப்படங்கள்/வீடியோ படங்கள்
• 150 பேருக்கான விருந்துபசாரத்துடனான மண்டபச் செலவுகள்
இவை அனைத்தையும் வழங்க நாம் தயாராக உள்ளோம்.


ஆறுதல் பரிசாக 10 தங்க நாணயங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்
உங்கள் வருங்கால துணைவருக்கும் உங்களுக்கும் இடையில் நடந்த மறக்க முடியாத சம்பவத்தை சுவைபட எழுதி, இருவரும் சேர்ந்து அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிட்டு 25கி அல்லது 50கி பெயாரோஸ் வெற்று உறையுடன் இணைத்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

பெயாரோஸ் சுப மாங்கல்யம், த.பெ. 1363, கொழும்பு.
முடிவுத் திகதி 2003 ஆகஸ்ட் 31.



FairRose
Fairness Cream
With Rosewater & Sandalwood Paste



அழகுக்கலை ஆலோசனைகளை வழங்கும் அனுசரணையாளர்கள்
Salon Nayana

மென்மையான சருமத்திற்கு வெண்மையான முகத்திற்கு

PHOENIX OEM 0447 Licence No: C/39/2003

# யாழ்.கோட்டையில் படைமுகாம் சமாதான சூழலுக்கு குந்தகம்!

**செய்திக் கட்டுரை**

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான விடயங்களில் ஒன்றாக விளங்குவது பொதுமக்கள் மத்தியில் இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படவேண்டும் என்பது.

இதன்கீழ் வடக்கு-கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படவேண்டும். பொதுக்கட்டடங்கள் மற்றும் பொதுமக்களின் வீடுகள், காணிகள் என்பனவற்றில் முகாமிட்டுள்ள படைகள் அவற்றிலிருந்து முற்றிலுமாக விலகி மக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கும் இயல்பான வாழ்க்கைக்கும் வழிசெய்ய வேண்டும். இராணுவத்தினரின் சோதனைக் கெடுபிடிகள் முற்றாக விலக்கப்படவேண்டும் போன்ற விடயங்கள் முக்கியமானவையாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிபந்தனைகளையெல்லாம் ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று மாதங்களுக்குள் நிறைவேற்றுவதாக நோர்வே தரப்பினரின் முன்னிலையில் ஒப்புக்கொண்டிருந்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. ஆனால், ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒருவருடம் கடந்துவிட்ட நிலையிலும் இவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

சமாதான சூழ்நிலையில் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரலாம் என்ற பேரவாவுடன் வெளிமாவட்டங்களிலிருந்து குடாநாட்டுக்கு வந்த மக்கள் பலர் இங்கு தமது வீடுகள், காணிகள் என்பன உயர்பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது கண்டும் அதற்கு வெளியேயுள்ள வீடுகள் படைமுகாம்களாக மாற்றப்பட்டிருப்பது கண்டும் இங்கு குடியேறமுடியாமல், ஏமாற்றத்துடன் திரும்பவும் அகதி வாழ்வுதான் கதி என்று திரும்பிச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பின்னணியில் விடுதலைப் புலிகள், பொது அமைப்புகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்ற பல தரப்புகளினதும் ஒட்டுமொத்தமான எதிர்ப்பையடுத்து ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டபடி ஒருசில இடங்களிலிருந்து படை விலகலுக்கு அரச தரப்பு சம்மதித்திருந்தது.

இதன்படி, யாழ்நகரின் மத்தியில் யாழ்.ஆஸ்பத்திரியின் பின்புறம் மற்றும் மின்சார நிலைய வீதி போன்ற பிரதான மையங்களை உள்ளடக்கி சுபாஸ், ஞானம்ஸ் ஹோட்டல்களிலிருக்கின்ற படைகளை வேறோர் இடத்துக்கு விலக்கி அங்கு தாம் பிடித்துவைத்துள்ள வீடுகள், காணிகள் மற்றும் கட்டடங்களை உரியவர்களுக்கு கையளிப்பதற்கும் உறுதிவழங்கப்பட்டிருந்தது.

அரசாங்க உயர்மட்டத்தினால் வழங்கப்பட்ட இந்த உறுதிமொழி யாழ். குடா படைத்தலைமைக்கு வெறுப்பை ஏற்படுத்திவிட்டிருப்பதாக அப்போது பேசப்பட்டது.

இருப்பினும், நகரின் மையப் பகுதியிலுள்ள படைத்தளத்தை விரைவில் வேறு இடத்துக்கு மாற்றுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இறுக்கமான உத்தரவொன்றைப் பிறப்பித்திருந்தார்.

**அற்புதன்**

அதனையடுத்து, யாழ். பிரதான வீதியில் மாநகரசபைக்குச் சொந்தமான சுப்பிரமணியம் பூங்கா வளாகத்தில் புதிய படைமுகாமை நிறுவுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்கும் குடாநாட்டில் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது.

யாழ்.பொதுநூலகம், துரையப்பா விளையாட்டரங்கு, முற்றவெளி, பாடசாலைகள், தேவாலயங்கள் போன்ற - சனப் புழக்கம் அதிகமாக உள்ள - பகுதியில் படைமுகாம அமைக்கப்படுவது மக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் என்று பலபொது அமைப்புக்கள் பிரதமர் மட்டத்துக்கு சுட்டிக்காட்டியதை அடுத்து அந்த முயற்சி ஒரு சில நாள்களில் கைவிடப்பட்டது. அந்தப் பிரச்சினை ஓரளவுக்கு தீர்வுக்கு வந்துவிட்டது என்று நினைத்து மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்குள் அரச படைகளின் மற்றுமொரு திட்டமிட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் - யாழ்.கோட்டைப் பகுதியில் முகாம் அமைப்பதற்குரிய முன்னேற்பாடுகள் துரிதகதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

அதற்கும் எதிர்ப்புக்குரல்கள் ஒலிக்கத் தொடங்கிவிட்டன.

முன்பு முகாம் அமைக்கத்தொடங்கிய சுப்பிரமணியம் பூங்கா வளாகத்துக்கும் இப்போது அமைக்கப்பட்டு வரும் கோட்டைப் பகுதிக்கும் இடையிலான தூரம் வெறும் 100 மீற்றர் வரையே.

இப்படியிருக்கும்போது சுப்பிரமணியம் பூங்கா வளாகத்தில் படைமுகாம் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தரப்பினர் அதற்கென முன்வைத்த காரணங்கள் கோட்டைப் பகுதியில் தற்போது அமைக்கப்பட்டு வரும் இடத்துக்கும் பொருந்தும் என்ற உண்மை படைத்தலைமைக்குப் புரியாமல்போனது கவனிக்கப்படவேண்டியதாகும்.

யாழ்.பொது நூலகம், துரையப்பா விளையாட்டரங்கு மற்றும் யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி போன்ற பாடசாலைகள், கோயில்கள் என்பன கோட்டைப் பகுதிக்கும் மிக சமீபமாகவே இருக்கின்றன.

நீண்டகாலத்தின் பின்னர் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் புனரமைக்கப்பட்டு வரும் யாழ். பொதுநூலகம் இப்போது திறக்கப்படும் தறுவாயை நெருங்கிக்கொண்டிருக்கின்றது.

இந்தநிலையில், கோட்டைப் பகுதி பாரிய இராணுவ முகாமாக மாற்றப்படுமானால் நூலகத்திற்கு வரும் வாசகர்களுக்கு பலத்த அச்சுறுத்தல் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

அது ஒரு வகையில் துப்பாக்கி முனையில் கல்வி கற்பதற்கு ஒப்பானதாகிவிடும்.

இது ஒருபுறமிருக்க, யாழ். ஞானம்ஸ், சுபாஸ் ஹோட்டல்களை உள்ளடக்கிய கட்டடத் தொகுதிகளில் தற்போது நிலைகொண்டிருப்பது 512ஆவது படையணியாகும். இந்தப் படையணியின் பிரதான கட்டளைத் தளபதி மற்றும் உயர் அதிகாரிகள் பலரும் இம்முகாமிலேயே தங்கியிருப்பதால் அவர்களின் பாதுகாப்புக் கருதி நகரில் மின்சார நிலைய வீதி உட்பட பல வீதிகள் பொதுமக்களின் பாவனைக்கு மூடப்பட்டுள்ளன.

இப்படைத்தளம் அப்படியே கோட்டைப் பகுதிக்கு இடம்மாற்றப்படும் போது பிரதான வீதி, பண்ணைப் பகுதிக்குச் செல்லும் வீதி மற்றும் பல முக்கிய வீதிகள் மூடப்படுவதற்கும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இதனால் பொதுமக்கள் மிகுந்த பாதிப்புக்களை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, இந்தப் படைமுகாம அமைக்கும் முயற்சியை ஒன்றுதிரண்டு எதிர்க்கவேண்டிய பொறுப்பும் கடமையும் குடாநாட்டு மக்களுக்குண்டு.

இதற்கிடையில், நகரிலிருந்து சற்று ஒதுக்குப்புறமாக - கடற்கரைப் பகுதியை அண்டி - கல்லுண்டாய் வெளி என்ற இடத்தில் முகாமை அமைக்கலாம் என்று சில தரப்புக்கள் ஆலோசனை தெரிவித்தபோதிலும் அங்கு நேரடியாகச் சென்று நிலைமையை அவதானித்த படைத்தலைமை அதிகாரிகள் அந்த யோசனையை அடியோடு மறுத்துவிட்டனர்.



முகாம் அமைப்பதை எதிர்த்து மறியல்.

பொதுமக்கள் குடியிருக்காத ஒதுக்குப்புறமான பகுதியில் படைமுகாமை அமைக்க முடியாது. மக்கள் மத்தியில்தான் அதனை அமைக்க வேண்டும் என்பதே படைத்தலைமையின் நிலைப்பாடாகும்.

மக்களின் கடுமையான எதிர்ப்பையும் மீறி மக்களின் பாதுகாப்புக்காக மக்கள் செறிந்துள்ள பகுதியிலேயே முகாம் அமைக்கப்படும் என்று விடாப்பிடியாக இருக்கின்ற படைத்தரப்பினரின் 'பரந்த மனப்பான்மையின்' உள்நோக்கம் என்னவாக இருக்குமோ என்று மிகுந்த அச்சப்படுகின்றார்கள் குடாநாட்டு மக்கள்.

கோட்டைப் பகுதியிலோ சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலோ முகாம் அமைப்பதும் யாழ். சுபாஸ், ஞானம்ஸ் ஹோட்டல்கள் மற்றும் அவற்றை அண்டிய பகுதியிலேயே தொடர்ந்தும் தங்கியிருப்பதும் ஒன்றுதானே என்றும் மக்கள் விசனப்படுகின்றனர்.

தற்போது சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன. புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் கடந்த சுற்றுப் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் என்பனவற்றை அரசு நிறைவேற்றாததால் பேச்சுக்களிலிருந்து தாங்கள் தற்காலிகமாக இடைவிலகுவதாக புலிகளின் தலைமைப்பீடம் அறிவித்திருக்கின்றது.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டபடி பொதுமக்கள் மத்தியில் இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படவுமில்லை, தாய்லாந்துப் பேச்சுக்களில் உறுதியளிக்கப்பட்டபடி யாழ். ஞானம்ஸ், சுபாஸ் ஹோட்டலில் இருந்து படையினர் வெளியேறவுமில்லை என்பது நோக்கற்பாலது.

எனவே, சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பதற்கு இந்தப் புதிய படைமுகாம் அமைப்பும் ஒரு காரணம் என்பது மறுக்கப்படமுடியாத உண்மையாகும்.

இந்த விடயத்தில் அரச உயர்பீடம் இதயசுத்தியுடன் தலையிட்டு நிலைமையினை நேரடியாக வந்து பார்வையிட்டு உரிய நடவடிக்கைகள் காலந்தாழ்த்தாது மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

தான் ஏற்கனவே பலதடவைகள் சர்வதேசத்தின் முன்னால் உறுதியளித்திருந்தபடி பொதுமக்களின் காணிகள், கட்டடங்களிலுள்ள படையினரை அங்கிருந்து விலக்கி சனநடமாட்டங்கள் அற்ற ஒதுக்குப்புறமாக கொண்டு செல்வதன்மூலம் மக்கள் மத்தியில் ஓரளவுக்காவது இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த முயற்சிக்கவேண்டும். ★

---

# குடாநாட்டில் புயலால் பாதிப்புற்றோருக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்குக!

## சமூக சேவை அமைச்சிடம் மாவை எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே.18

யாழ்.குடாநாட்டில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் வீசிய புயற்காற்றின் காரணமாக பயிர்கள் மற்றும் உடைமைகள் என்பன சேதமடைந்தவர்களுக்கு அரசு நஷ்டஈடு வழங்க வேண்டுமென யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா சமூக சேவைகள் அமைச்சைக் கோரியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வீசிய காற்றினால் குடாநாட்டில் பரவலாகப் பல இடங்களிலும் பயன்தரு மரங்கள்பல முறிந்தும், வேரோடு சாய்ந்தும் வீழ்ந்துள்ளன. அத்துடன், அதிக எண்ணிக்கையான தென்னை மற்றும் பனை மரங்களும் வீழ்ந்துள்ளன.

இவ்வாறு வீழ்ந்த மரங்கள் சிலரது வீடுகள், மதில்கள் ஆகியவற்றின் மேல் வீழ்ந்ததால் அவை சேதமடைந்துள்ளதுடன், ஆலயங்களின் கூரைகள் சிலவும் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளன. இவற்றினால் மக்களுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து, இது வரையும் சமூக சேவைகள் அமைச்சினாலோ அல்லது யாழ்.செயலகத்தினாலோ எந்தவிதமான விவரங்களும் திரட்டப்படவில்லை. மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கோ, உடனடி நிவாரணம் வழங்குவதற்கோ இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றார்கள் என்று மாவை எம்.பி.தமது வேண்டுகோளில் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில், தென்பகுதியில் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஒரு தகவல் தெரிவித்தது.(எ-10-86)

---

# தென்னாசிய நாடுகளில் புவியல் தகவல் ஒழுங்கு

## கொழும்பில் 3 நாள் மாநாட்டில் ஆராய்வு

தென்னாசிய நாடுகளில் புவியியல் தகவல் ஒழுங்கு (Geographical Information System) கற்கை நெறியினை விருத்தி செய்யும் நோக்குடன் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சார்ந்த பல்கலைக்கழகங்களின் கல்விமான்களையும் தென்னாசியப் பிராந்தியத்தைச் சார்ந்த பல்கலைக்கழகங்களின் கல்விமான்களையும் உள்ளடக்கியதான மூன்று நாள் மாநாடு கடந்த 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. மாநாட்டுக்கான அனைத்து அனுசரணைகளையும் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியிருந்தது. மேற்படி மாநாடு "புவியியல் தகவல் விஞ்ஞான கல்வி அபிவிருத்திக்கான சர்வதேச கூட்டமைப்பு (International Cooreration for GIScience Education) எனும் கருப்பொருளைக் கொண்டமைந்திருந்தது. இச்சர்வதேச மட்டத்திலான மாநாட்டினை கொழும்பில் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ்பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளர் கே.சுதாகர் உரிய முறையில் மேற்கொண்டிருந்தார்.

பின்வரும் இலக்குகளை எய்தும் நோக்குடன் மேற்படி மாநாடு நடத்தப்பட்டது.

★ மிகவும் விரைவாக வளர்ச்சியடைந்து வரும் GIS (Geographical Information System) துறை மூலம் ஐரோப்பியாவுக்கும் தென்னாசியாவுக்கும் இடையே கல்விசார் மற்றும் விஞ்ஞான இடைத்தொடர்பை விரிவாக்குவதன் ஊடாக பொருளாதாரத்தில் இணக்கத்தன்மையை ஏற்படுத்துதல்.

★ ஐரோப்பாவில், தென்னாசியாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் வேறுபட்ட குறிப்பாக பட்ட மற்றும் பட்டபின் படிப்பு மட்டங்களில் புவியியல் தகவல் ஒழுங்கில் ஒழுங்கு முறையான கல்விக்கான ஒரு சர்வதேச தரத்திலான பாடத்திட்டத்தை விருத்தி செய்தல்.

★ ஐரோப்பா போன்று தென்னாசியாவில் தொழில் வாய்ப்புக்கு தகுந்தவாறான GIS கல்வியை விருத்தி செய்தல்.

★ மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் குறுகிய கால பயிற்சியை வழங்குதல்.

இம்மாநாட்டிற்கு ஐரோப்பிய ஒன்றியத்தைச் சார்ந்த ஒஸ்ரியா (Salzburg) நெதர்லாந்து (Vrije University) ஸ்பெயின் (Gioma University) ஆகிய நாடுகளும், தென்னாசிய பிராந்தியத்திலிருந்து இந்தியா (Jawarhalal Nero University. Gao University) இலங்கை (University of Jaffna) ஆகிய இரு நாடுகளும் அங்கம் வகித்திருந்தன.

மேற்படி மாநாட்டிற்கு Proffessor Josept Strawbel (Australia - project Director) Dr. Shahnawaz (Australia - project manager) Mathil de molendijk (Netherland) Irene compte (Spain) M.C.Sharma (Jawarhalal Neru University) Makender kotha (Goa University) ஆகியோரும் யாழ்பல்கலைக்கழகத்திலிருந்து K.Suthakar (GIS Need Analyst) Dr.A.Antonyrajan (Market potential Analyst) ஆகிய இருவரும் அழைக்கப்பட்டிருந்தனர்: எனினும் Dr. A.Antonyrajan பங்குபற்றவில்லை.

இம்மாநாட்டின் ஆரம்பநிகழ்வுக்கு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், முன்னாள் துணைவேந்தரும் புவியியற்றுறை பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை, கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், கொழும்பு பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் யோகா இராசநாயகம் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

இம் மாநாட்டின் மூலம் யாழ்.பல்கலைக்கழகம் உள்ளிட்ட சில தென்னாசிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு GIS சார்ந்த துறைகள் மிகுந்த அபிவிருத்திகிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## TELE VOICE நிறுவன சேவை

இன்று யாழ்.நகரிலும் மேசைத் தொலைபேசி
சேவையை வழங்குகின்றது.
இந்தச் சேவையை சிக்கலில்லாத
மிகத் தெளிவான முறையில் உரையாடக் கூடியவாறு
உத்தரவாதத்துடன் எப்பிரதேசத்திலும் அமைத்துத் தருகின்றனர்.

தொடர்புகளுக்கு: 071 - 335580
0777 - 113, 663
0777 - 067, 389
071 - 340540

**ரெலி வொய்ஸ்**

இல.13, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(யாழ்.சந்தை சைக்கிள் பாதுகாப்புக்கும் R.B புக்கிங் சென்ரருக்கும் அருகில்)

(18096)


## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பர் க.விஜயரட்ணம் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கந்தையா இலட்சுமி**

அவர்கள் 12.05.2003 அன்று காலமானதையிட்டு அவரின் குடும்பத்தவர் துயரில் பங்கு கொள்வதோடு,
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்....

நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(18101)

கோபிகா ஆடையகம்,
கௌரி ரெக்ஸ்ரைல்
உரிமையாளர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு
23 - 10 - 1946



இறப்பு
13 - 06 - 2002

**அமரர் தம்பிராசா செந்தில்ராசா**

திதி: 19.05.2003 திங்கட்கிழமை

*ஆண்டு ஒன்று போகவில்லை*
*போனதாய் நினைக்கின்றோம்*
*போகவே முடியாது - உம்*
*உருவம் எம் மனதிலே பதியுதப்பா!*

கற்குளலேன்,
கோட்டடி, யாழ்ப்பாணம்.

(18103)

– குடும்பத்தினர்.

## பெரியவிளான பாடசாலையில் ஜீ.ரீ.இசற் உதவியுடன் கட்டடப் பணிகள்

சண்டிலிப்பாய்,மே18

பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில பூர்த்தியடையாத நிலையில் இருந்து வரும் வகுப்பறை மண்டபத்தை பூர்த்தி செய்து கொடுப்பதற்கு ஜீ.ரீ. இசற் நிறுவனம் முன்வந்துள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விடுத்திருந்த வேண்டுகோளை அடுத்து இந்த நிறுவனம் கட்டடத்தைப் பூர்த்திசெய்து தருவதற்கு முன்வந்துள்ளதாகப் பாடசாலை அதிபர் திருமதி கொ.பீ.பியன்வெனு இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

(எ-135)

## சாவகச்சேரியில் நாய்களுக்கு தடுப்பூசி

சாவகச்சேரி,மே18

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது என நகரசபைச் செயலாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரில் பின்வரும் இடங்களில் இந்தப் பணி அன்றைய தினம் இடம்பெறும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரையும் -

நுணாவில் மத்தி கிராம சேவை அலுவலர் அலுவலகத்தில் காலை 11மணி தொடக்கம் 12.30 வரையும்-

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் கிளை நூலகத்தில் நண்பகல் 12.30 தொடக்கம் 2 மணிவரையும்-

தடுப்பு மருந்து ஏற்றப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே, பொதுமக்கள் அன்றைய தினம் தவறாது தமது வளர்ப்பு நாய்களுக்கு மருந்து ஏற்றிக் கொள்ள வேண்டும் என்றும் -

நகரசபைத் தலைவர் அறிவித்துள்ளார்.

(எ-31)

## வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான யூனிவேசல் கல்வி நிறுவனம்

**Vallipura Alvar Thevasthana Universal Educational Centre**

மந்திகை கால்நடை வைத்திய வீதிக் அண்மையில் வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் தேவஸ்தானம், கணனிப் பயிற்சி நிலையமொன்றினை எதிர்வரும் ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளது. நவீன கணனி இயந்திரங்களுடன் குறைந்த கட்டணத்தில் அனுபவம்மிக்க பயிற்சியாளர்களைக் கொண்டு கற்கைநெறி வழங்கப்படும்.

இந்நிறுவனம் இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடனும் கொழும்பில் புகழ்பெற்ற கணனிப்பயிற்சி நிலையத்துடன் இணைந்தும் செயற்பட ஏற்பாடாகி உள்ளது. வழங்கும் சான்றிதழ் பரந்த கணிப்புப் பெறுமதி வாய்ந்ததாகும்.

பயிற்சி நிலையம் வைத்திய கலாநிதி அமரர் ஸ்ரீ பத்மநாதன் வீட்டில் ஜூன் மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்க ஏற்பாடாகி உள்ளது.

ஆரம்ப கற்கை நெறிகளாவன பின்வருமாறு:-

1) M.S.Word .
2) M.S.Excel
3) M.S.Access
4) M.S.Power Point
5) Java
6) Visual Basic
7) Internet/E-Mail

மேலும் பல கற்கைநெறிகள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது மாணவர்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. விண்ணப்பப்படிவங்களுக்கும், மேலதிக விவரங்களுக்கும் ஆலய கருமபீடத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி இல.226-3074

– அறங்காவலர் சபை.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்,
துன்னாலை வடக்கு,
புலோலி.

(C/27962)


# இப்பொழுது யாழ் நகரில்

## மூன்று தசாப்தங்களுக்கு மேலாக யாவரினதும் நம்பிக்கையை வென்ற

# ஒறல்கா

Rs. 98/-

ஸ்கின் லோஷன்




கவர்ச்சியான புதிய கொள்கலனில்

சிறுவர், வாலிபர், முதியோர்
யாவருக்கும்
உகந்த ஒறல்கா
பாதுகாப்பான அழகைப் பேணும்
சரும மெருகூட்டி

**யாழ் முகவர்:**

**வெஸ்கோ பாமசி & மல்டி ஷொப்**
470, (250) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 3188

*விநியோகஸ்தர்*
**யுனைட்டெட் டிரேட் ஏஜன்ஸீஸ்**
த. பெ. 44,கல்கிசை
T.P : 731558, 731562 Fax : 733460
E-mail : oralga@sltnet.lk

**சிவப்பு நிற மேலுறையுடன் மேம்படுத்தப்பட்ட தரம்**
தேமல், பரு, சொடுகு நீக்கும் சிறப்பியல்பு கொண்டது

**பச்சை நிற மேலுறை**
உலர்ந்த சருமத்தை நீக்கும் ஆரோக்கியமான பிரகாசமுள்ள சருமத்திற்கு

**எல்லா பாமசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்**